விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 13 சனிக்கிழமை (26.01.2002) தொலைபேசி 3378 ஒலி 38

## சமாதான முயற்சிக்கு முழு ஆதரவு

# புலிகளின் தடை நீக்கத்தை பிரிட்டன் அரசு எதிர்க்காது!

## தூதுவர் லிண்டா டபீல்ட் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்கவதா? நீக்காமல் விடுவதா? என்பதை தீர்மானிக்கும் முடிவை இலங்கை அரசே மேற்கொள்ள வேண்டும்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு இலங்கை அரசு எடுக்கும் எந்த ஒரு தீர்மானமும் பிரிட்டிஷ் அரசின் நிலைப்பாட்டை பாதிக்கமாட்டாது என்று பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இலங்கை அரசு விதித்துள்ள தடையை நீக்குவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றி இலங்கைக்கான பிரிட் டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட் "சமாதான பேச்சுக்கள் மூலமாக எடுக்கப்படும் சகல நடவடிக் கைகளையும் நாம் ஆதரிக்கின் றோம்" என்ற தலைப்பில் வெளி யிட்டுள்ள அறிக்கையொன்றி லேயே மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இலங்கையின் இனப்பிரச் சினை தொடர்பாக இலங்கை அர சாங்கமும், தமிழீழ 'விடுதலைப் புலிகளும் எடுத்தவரும் சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டிஸ் தொட ர்ந்தும் தனது முழு அளவிலான ஆதரவை வழங்கிவரும்

(2ம் பக்கம் பார்க்க)

## மீன்பிடித்தடையை நீக்குக
## பாதுகாப்பு அமைச்சருக்கு அமைச்சர் ஜயலத் கடிதம்

(கொழும்பு)

வடபகுதி மீனவர்களின் மீன் பிடித்தடையை நீக்குமாறு புனர் வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜய லத் ஜெயவர்த்தனா பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

வடபகுதி மீனவர்கள் மீதான தடையை நீக்கி, அவர்களது வாழ்க் கையில் ஒளியேற்றுமாறும் அக் கடிதத்தில் கேட்டுள்ளார்.

இதேவேளை மீன் பிடிப்பதற்கு விதித்திருக்கும் தடை நீக்கப்படா விட்டால் இம்மாதம் 30ம் திகதி உண்ணாவிரதப்போராட்டத்தில் குதிக்கப்போவதாக மீன்பிடித் தொழிலாளர் சங்கம் அறிவித்துள் ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (வ)

## பிணை அனுமதி மறுப்பு

(கொழும்பு)

இத்தாலிக்கு சட்ட விரோதமாக செல்ல முயன்று கைதுசெய்யப்பட்ட 114 பேரின் பிணை மனுவை நேற்று கொழும்பு நீதவான் நிராக ரித்துள்ளார்.

கடந்த வாரம் இந்த 114 பேரும், சட்டவிரோதமாக இத்தா லிக்குள் செல்ல முயற்சித்த போது நடுக்கடலில் வைத்து கடற் படையினரால் கைது செய் யப்பட்டிருந்தனர்.

(2ம் பக்கம் பார்க்க)

## மாதம் 16மி. ரூபா நட்டம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துக்கு மாதாந்தம் 16மில்லியன் ரூபாவரை நட்டம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதேபோல் ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்கும் மாதாந்தம் 9.7மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகவும் இவ்விரு கூட்டுத்தாபனத்திலும் ஊழியர்கள் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

## வடமராட்சிப் பகுதியில் புலிகள் நடமாட்டமாம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதிக்குள் நேற்று விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் வந்துபோனதாக அப்பகுதியில் பரவலாக பேசப் பட்டது.

அரசு புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை அடுத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிக ளின் உறுப்பினர்கள் ஆயுதங்க ளின்றி நடமாடுவதும் இருதரப் பினதும் பாதுகாப்பெல்லைகளில் புலிகளும் இராணுவத்தினரும் சந்தித்து நட்பு ரீதியில் உரையா டுவதும் தற்போது சாதாரண விட யமாகியுள்ளமை இங்கு குறிப் பிடத்தக்கது (ந)

## பொலிஸார்-புலிகள் வெலிகந்தையில் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பு பொலநறுவை வெலி கந்த பிரதேசத்தில் விடுதலைப் புலிகளும் பொலிஸாரும் நேற்று சந்தித்து சிநேகிதபூர்வமாக கலந்துரையாடி உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் வாகரை முகாம் தலைவர்களுடன் நடத்திய இவ்நட்பு ரீதியிலான கலந்துரையாடல் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருந்ததென வெலிகந்தை உதவி பொலிஸ் அத்தியட்சகர் என்.பி. அங்குனமெல தெரிவித்துள்ளார்

இது குறித்த அவர் மேலும் தெரிவிக்கையில் ஆயுதங்கள் எதுவும் இன்றி வெலிகந்த பொலிஸ் முகாமுக்கு வந்த விடுதலைப்புலிகளின் தலைவர் களை பொலிஸார் வரவேற்று உபசரித்தனர்.

(2ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிக் கான விண்ணப்பப் படிவங்கள் இன்றுமுதல் விநியோகிக்கப் படும். இப்படிவங்களை பல்க லைக்கழக மானியங்கள் ஆணை குழுவின் யாழ் முகவரான பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

கையில் ஒளியேற்றுமாறும் அக் (வ)

மட்டக்களப்பு செல்லமுயன்ற

# விடுதலைப்புலி உறுப்பினர்களை படையினர் திருப்பியனுப்பினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பட்டிருப்பு பாதையூடாக படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் செல்ல முற்பட்ட சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளை படையினர் வழிமறித்து திருப்பியனுப்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3மணியளவில் போரதீவு, பளுகாமம் பகுதிகளில் இருந்து சுமார் நூற்றுக் கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் வரிப்புலிச் சீருடையுடன் வீதிக்கு இருமருங்கிலும் அணிவகுத்துக் கொண்டு பட்டிருப்பு நோக்கிச் சென் றனர். இதனை அறிந்த விசேட அதிர டிப்படையினர் சோதனைச் சாவடியை மூடியதுடன் போக்குவரத்தையும் தடைசெய்தனர்.

ஆனால் விடுதலைப்புலிகள் தாம் சோதனைச்சாவடியூடாக இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப் புக்கு செல்ல அனுமதிக்கவேண்டுமென்றுகோரினர். ஆனால் படையினா மறுத்து விட்டனர்.

# மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் இன்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

இருநாள் விஜயத்தை மேற்கொண்டு மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவரும், ஜனாதிப தியின் சட்டத்தரணியுமானபாயிஸ் முஸ்தபாவும் அவரது குழுவினரும் இன்று காலை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், விசாரணைகள் மேற்கொள்ளவுமே இக்குழுவினர் யாழ்ப்பாணம் வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது

(2ம் பக்கம் பார்க்க)

அம்பாறை உள்ளூராட்சித் தேர்தல்

# தமிழர் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களை நிறுத்தாது?

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் இடம் பெறும் உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதில்லை என தமிழர் தேசிய கூட்டமைப்பு முடிவுசெய்துள்ளதாக இக்கூட்டமைப்பின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டாமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் தமிழர் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள 14பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடத்துவதாக முடிவெடுத்துள்ளது

(2ம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வழங்க பிரதமர் மறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சர்களுக்கும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக் கும் இராணுவத்தின் பர்துகாப்பு வழங்குவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க பாராளுமன்ற குழுக் கூட்டம் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் அமைச்சர்களும், எம்.பிக்களும்

(5ம் பக்கம் பார்க்க)

யாழ் குடாவில் நவீன பரிவர்த்தனை நிலையம்

# 4000 தொலைபேசி இணைப்புகள் இவ்வருட இறுதிக்குள் வழங்கப்படும்!

## ரெலிக்கொம் நிறைவேற்று பணிப்பாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு தொலைபேசி பாவனையாளர்களின் தேவையை பூர்த்திசெய்யும் வகையில் இவ் வருட இறுதிக்குள் சுமார் 4000 தொலைபேசி இணைப்புக்களை பாவனையாளர்களுக்கு வழங்கக் கூடியவகையில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் ஒன்று பண்ணையில் நிறுவப்படும் என்று ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுஹேஅனான் தெரிவித்துள்ளார்.

யாழ்குடா நாட்டில் தொலைத் தொடர்பு சேவை, குறித்து ஆராய்வதற்கு 20 வருடங்களுக்குபின் முதலாவது தட வையாக ரெலிக்கொம் நிறுவனத்தின் நிறைவேற்றுபணிப்பாளர் சுஹேஆனான் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தி ருந்தார். (2ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### இசை வகுப்புகள்

நடனம், வாய்பாட்டு, மிருதங்கம்,ஓகன்,தபேலா போன்றவற்றின் புதிய பிரிவுகள் 28.01.2002 ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: அபர்ணாலய நுண் கலை கல்லூரி கோண்டாவில் இந்துக் கல்லூரிக்கு முன்பாகவும் ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, சிறிய முத்துத்தம்பி முன்பாகவும். (4271)

### தேவை

கைத் தொழில்பழகுவதற்கு ஆட்கள் தேவை. நேரில்வரவும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- கோ. விஜயகுமார் 192/1 நாவலர் வீதி மிருதங்க தொழில் நிலையம் பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (4289)

### விற்பனைக்கு

**Pentium I, MMX, II** கணனிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு சுரேஸ்குமார், பூம்பொழில், 1201, **K. K. S Road, Jaffna.** (4401)

### இரசாயனவியல் வகுப்புக்கள்

இரசாயனவியல் பிரத்தியேக வகுப்புகள் பிரிவு 2004 விரைவில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்புகளுக்கு நியூ ஹப்பி தையலகம், 4, செட்டித்தெரு நல்லூர். (4296)

### புலமைப் பரிசில் 2002

பரீட்சை 18ல் அதிகூடிய புள்ளிபெற்ற பரிசுக் குரியவர்கள்

★ வ. தனுயன் -169 (யா- இந்து ஆ. பாடசாலை)
★ வி. தீபன்ராஜ் - 149 (யா- ஆனைப்பந்தி மெ. மி. வித்.)
★ ம. துவாரகன் - 148 (யா- இந்து ஆ. பாடசாலை)

அடுத்த பரீட்சை 27-01-02 ஞாயிறு காலை 8.30

தரம் 1 முதல் O/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

**நாவலர்**
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(C-3342)


## இன்று திருக்குறள் மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான திருக்குறள் மனனப் போட்டி இன்று சனிக்கிழமை மு. ப. 9. 00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக நல்லூர்க் கோட்டக் கல்வி அதிகாரிஅறிவித்துள்ளார். (செ)

## கற்பித்தல் உபகரணம் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க்கோட்டப்பாடசாலைகளுக்கிடையிலான ஆரம்ப பிரிவு கற்பித்தல் உபகரணக் கண்காட்சி இன்று சனிக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (செ)

## நீதியமைச்சர் இணக்கம்

(கொழும்பு)

பூஸா மற்றும் களுத்துறைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் விடுதலை தொடர்பாக, அமைச்சர் சந்திரசேகரன் முன் வைத்த மூன்று கட்ட நடவடிக்கைகளுக்கு நீதியமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். (உ)

### மனித

யாழ் மனிதஉரிமைஆணைக் குழு அலுவலகத்துக்கு இன்று காலை 10 மணிக்கு வருகை தரும் இக் குழுவினர் அங்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளையும்அகதிகள் புனர் வாழ்வுக் கழக அதிகாரிகளையும் மற்றும்தென்னை அபிவிருத்திச் சங்க அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

முற்பகல் 11மணிக்கு பத்திரிகையாளர்களையும் மாலை 3மணிக்கு இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகளையும் இக்குழுவினர்சந்தித்துப் பேசவுள்ளனர். (இ-9-19)

### பொலிஸார்

சுமார் இரு மணிநேரம் புலிகளுடன் நடத்திய பேச்சுகளில் அரசாங்கத்தின் சமாதான முயற்சியை அவர்கள் பாராட்டியுள்ளனர்.

அத்துடன் பொலநறுவைக் கிராமங்களை சுற்றிப் பார்ப்பதற்கும் அனுமதி கோரியுள்ளனர் இதற்கு பொலிஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு முடிவை அறிவிப்பதாகக் கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்துளார். (ந- 4)

# விலை உயர்வைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை அவசியம்!

## பிரதமரிடம் நேரில் ஈ.பி.டி.பி கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையை தாம் வரவேற்பதாக ஈ.பி.டி.பி தெரி தெரிவித்துள்ளது.

பிரதமரை அவரது அலுவலகத்தில் யாழ்,மாவட்டஎம். பி டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி'பி தூதுக்குழுவினர் நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சு நடத்தினர். இச் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது தற்போதைய அரசியல்நிலைமைகள் தொடர்பானபல்வேறு விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்துள்ள விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது பற்றியும், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் களைவது, பற்றியும் திருகோணமலை லிங்கநகர் குடியேற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

யாழ்.குடாநாட்டின் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப் படுவதாக பிரதமர் தெரிவித்தார். அத்துடன் வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஊடாக அணிதிரட்டப்பட்டுபயிற்சி நெறிகளுக்கு உள்ளாக்கப்பட்ட தொண்டர்களுக்கான ஊக்குவிப்புக்கள் தொடர வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டு முன்னைய அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத விடயங்களை உடன் அமுல்படுத்தவேண்டும்எனவும் டக்ளஸ் தேவானந்தா பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவிடம் கேட்டுக்கொண்டார். குறிப்பாக

- வடக்குக் கிழக்கில் 1000 தொண்டர் ஆசிரியர்களை சேவையில் உள் வாங்குவதுடன் 2000ம்ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கல்.
- வடக்கு கிழக்கு மாகாணத்தில் எழுதுவினைஞர் நியமனத்தின் போது பாதிக்கப்பட்ட சுமார் 70பேருக்கு நியமனம் வழங்குதல்
- வடக்கு கிழக்குமாகாணத்தில் கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் சுமார் 41கணக்காய்வாளர்களுக்கான நியமனம் வழங்குதல்
- ஜூலாய் 1983 கலவரத்தின் போதும் பின்னரும் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்களுக்கான நிவாரணங்களை வழங்குதல்.
- தொழில் நுட்ப வேலைகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையாற்றும் உத்தியோகஸ்தர்களை அரசசேவையில் உள்வாங்குதல்

போன்ற விடயங்களில் உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டும் மேலும் பாதிப்புக்களுக்கு இலக்கான குடும்பங்களுக்கு வழங்கப்படும் உலர்உணவுப் பொருட்களின் அளவுகள் அதிகரிக்கப் படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இவ் விடயங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் தேவையான நடவடிக்கைகளை ஆக்கபூர்வமான வகையில் முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளார். (இ)

## யோசவ்வாஸ் பெருவிழா

(ஈச்சமோட்டை)

கொட்டடி பண்ணை யோசவ்வாஸ் முனீந்திரனின் பெருவிழாத் திருப்பலிநாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8. 00மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-59)

## செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் தொடர்பாக யாழ் வணிகர் கழகத்துடன் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் செயலகத்தில் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் கலந்துரையாடலொன்று இடம் பெறவுள்ளது. (இ-19)

## சான்றிதழ் வழங்கல்

(அச்சுவேலி)

முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் தமிழ்- சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கிலம்- சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளுக்கான சான்றிதழ வழங்கும் வைபவம் நேற்று யா/அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. (உ-218)

### பிணை

கைது செய்யப்பட்ட114 பேரும் தம்மை பிணையில் விடுவிக்குமாறு கோரியபோது அவர்களது பிணைமனுவை நிராகரித்த கொழும்பு நீதிவான் எதிர்வரும் 8ம்திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (வ)

### புலிகளின்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது சம்மந்தமாக இலங்கை அரசு எடுக்கும் எந்த முயற்சியும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சின் முடிவை பாதிக்கமாட்டாது.

இலங்கை அரசு புலிகள் மீதான தடையை நீக்கினாலும் பிரிட்டனில் புலிகளின் தடையை நீக்கும் முடிவை எமதுநாட்டுஉள்துறைஅமைச்சே தீர்மானிக்கும் இது பிரிட்டனோடு தொடர்புடைய விடயமாகும். ஆனால்அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில்இடம் பெற்றுவரும் சமாதான முயற்சிகளைபிரிட்டிஷ் அரசு வரவேற்கிறது அப் பேச்சு வார்த்தைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

### தமிழர்

இம் முடிவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்களை நிறுத்துவதில்லை எனவும் இதற்குப் பதிலாக அம்பாறை மாவட்ட தமிழர் மகாசபை சுயேட்சையாக போட்டியிடுமெனவும் தெரிய வருகிறது (ந)

## விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்

(அராலி)

தொல்புரம், மூளாய், பொன்னாலை விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்தவர்கள் தற்போது, தாங்கள் பயிரிட்டுள்ள பயிர்களின் விபரத்தை தெரியப்படுத்தி சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் மாதிரி விற்பனை நிலையத்தில் ஐந்து லீற்றர் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ளலாம் என மேற்படி சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (செ-214)

### 4000 தொலைபேசி

யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவன அலுவலகத்தில் தொலை பேசி இணைப்புப் பெற்ற வாடிக்கையாளர்களை இவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஸ்ரீலங்கா ரெலி கொம் நிறுவன பிரதிப் பராமரிப்பு அதிகாரி ஜமசிற்றா பாதுகாப்பு ஆலோசகர் முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் வசந்த பெரேராஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

ஸ்ரீலங்கா ரெலி கொம் பிராந்தியத் தலைவர் எஸ். கனக சூரியர் தலைமையில் மேற்படி சந்திப்பு இடம் பெற்றது.

ரெலி கொம் நிறுவன நிறைவேற்றுப் பணியாளர் தொடர்ந்து பேசுகையில்

தற்போது நவீன வசதிகளுடன் நிறுவப்படவிருக்கும் புதிய பரிவர்த்தன நிலையம் நிறுவப் பட்டபின் இன்ரநெற் வசதிகள் ஈமெயில் வசதிகள் போன்றவையும் செயற்பாட்டில் வரும் என்று கூறினார்.

இச் சந்திப்பின் போதுயாழ் பிராந்திய தொலைதொடர்பு சேவையாளர்சங்கம்குடாநாட்டின்தொலைத் தொடர்பில் நிலவும் குறைபாடுகள்அடங்கியமகஜர் ஒன்றை பணிப்பாளர்சுஹேஅனானிடம் கையளித்தது.

யாழ் மத்திய கல்லூரி அதிபர் இ. இராசதுரை சட்டத்தரணி வி. ரி. சிவலிங்கம் ஆகியோரும் ஸ்ரீலங்காரெலிகொம்மின் செயற்பாடுகள் பற்றி எடுத்துக் கூறினர்.

ஸ்ரீலங்கா ரெலி கொம் நிறுவன யாழ் பொறியியலாளர் அன்ரனும் இதில் கலந்து கொண்டார். (வ)


## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அணமையில்)

| | |
|---|---|
| கேக் ஐஸிங் | தையல் பயிற்சி |
| உணவு தயாரித்தல் | பூவேலை |
| கை வேலை | FABRIC PAINTING |

★ மேற்படி பயிற்சிகள் எல்லாவற்றையும் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம் **FACIAL MAKEUP**, மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.

★ சனி, ஞாயிறு புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 27-01-2002
கிழமை நாள் புதிய பிரிவுகள்
ஆரம்பம்; 28-01-2002

★ மேலும் விபரங்களுக்கு தினமும் பி.ப. 2.00 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

(C 3337) இயக்குநர்

பல்கலைக்கழக அனுமதிக்கான
## விண்ணப்பம் 2002-2003

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் இன்றும் நாளையும் தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்படும்

## பூபாலசிங்கம் புத்தகசாலை

இல, 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
(C-3341)

# உண்மை நிலையறியாது பாரதி சொன்னமொழி
# 'சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்'

**டாக்டர் பே. எட்வேட்**

'சிங்களத் தீவுனுக்கோர் பாலம் அமைப்போம்' என பல ஆண்டுகட்கு முன்பு பாரதியார் கூறியிருந்தார். பாரதியாரின் கூற்று - எண்ணம் நிறைவேறும் நாள் அண்மித்து விட்டது-நெருங்கிவிட்டது.

மாண்புமிகு பிரதமர் ரணில் விக்ரமசிங்கா இந்தியாவுக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது இந்திய பிரதமர் மாண்புமிகு வாஜ்பாய் அவர்களைச் சந்தித்த வேளை இலங்கை பிரதமரும் இந்திய பிரதமரும் சேர்ந்து எடுத்த தீர்மானங்களில் இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் ஓர் பாலம் அமைக்க முடிவு செய்தனர்.

இந்தியாவுக்கு இலங்கை மக்கள் புகையிரதம் மூலம் சென்றுவந்தது பலருக்கு நினைவிருக்கலாம். அப்படியொரு வாய்ப்பு-வசதி-சூழ்நிலை மீண்டும் வருமானால் இலங்கை மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பது வெள்ளிடைமலை.

**சுப்பிரமணிய பாரதியார்**

பாரதியார் ஓர் சிறந்த தேசபக்தன். சிறந்ததோர் விடுதலைவிரும்பி.ஓர் பொதுவுடைமைவாதி ''தனியொருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்''எனக் கூறினார். ஒரு மனிதன் கூட இந்த உலகத்தில் பட்டினியால் வருந்தக் கூடாது என்பது அவரது கருத்து.

''அன்பென்று கொட்டு முரசே!மக்கள் அத்தனை பேரும் நிகராம்'' எனக் கூறியதும்பாரதியார்தான்.மக்கள் மீதுள்ள அன்பு-பாசம்-சுதந்திர உணர்வு இவைகள் பாரதிக்கு நிறைய இருந்த காரணத்தினால் இவ்வாறு பலபாடல்களைப் பாடியும் மேடைகளில் பேசியும் வந்தார். அப்படிப்பட்ட பாரதியார் ''சிங்களத்தீவு'' என ஏன் கூறவேண்டும்? 1/3 பங்கு தமிழர்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், 2/3 சிங்கள மக்கள் கொண்ட இலங்கைத் தீவில் தமிழர்கள் சிறுபான்மை இனம் என்பது மறைக்கவோ, மறுக்க முடியாத ஒன்றாகும்.

**சிங்களவர்**

விஜயன் என்பவன் இந்தியாவில் இருந்து நாடுகடத்தப்பட்டு இலங்கையில் குடியேறினான் என்பதையும் இவன் ஒரு சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவன் என்பதையும், வரலாறு கூறுகின்றது. விஜயனோடு கூடவந்த எழுநூறு நண்பர்களும் சிங்களவர்களே. இலங்கையில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ்ப் பெண்கள் இனம் - மதம் - சாகித்தியம்-மரபு இவைகளை முன் வைத்து சிங்கள வாலிபர்களை திருமணம் செய்ய முன்வரவில்லை,இதனால் இந்தியாவில் இருந்து எழுநூறு தமிழ்ப் பெண்களை அழைத்து விஜயன் தனது சிங்கள நண்பர்கட்கு திருமணம் செய்து வைத்தான். அட்டமி, நவமி, வெள்ளிக்கிழமை,புரட்டாதிச் சனி,கந்தசஷ்டி விரதம், ஐப்பசி வெள்ளி, பங்குனித் திங்கள், திருவெம்பாவை இன்னோரன்ன காரணங்களைக்காட்டி மாதம் முப்பது நாளும் சாக்குப் போக்கில் வாழ்ந்த தமிழ்ப் பெண்களால் தமிழர்களின் விகிதாசாரம் குறைந்திருக்கலாம். ஏன் 1/3 ஆகக் குறைந்தது என்பது மருத்துவ ஆய்வுக்கு உட்பட்ட ஒரு விடயமாகும். மூன்றிலொருபங்கு தமிழ் மக்கள் ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**தேசிய இனம்**

இது ஒரு 'தேசிய இனம்' என்பது உலக நாடுகள் அறிந்த விடயம். இந்தத் தேசிய இனம் தான் பிரிந்து வாழ விரும்புகின்றது.

சீனா, ருஷ்யா ஆகிய நாடுகளில், உலக பொதுவுடைமை மேதை கால் மாக்ஸின் தத்துவத்தையும் கொள்கைகளையும் சட்ட திட்டங்களையும் வைத்துஅரசாங்கத்தைநடத்துகின்றார்கள். அங்கே பொதுவுடைமை ஆட்சிநடைபெறுகின்றது. கால்மாக்ஸின் 'மூலதனம்' என்ற நூலில் ஒரு தேசிய இனம் தான் விரும்பினால் பிரிந்து வாழலாம்' எனக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த'மூலதனம்' என்ற நூல் நோபல் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது

கால் மாக்ஸின் கொம்யூனிஸ்ட்கொள்கைப்படிஇலங்கையின் ஒருதேசிய இனமான தமிழ் மக்கள் பிரிந்துவாழ விரும்புவதில் தவறொன்றுமில்லை.

**யாழ்ப்பாணக் கோட்டை**

உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த திலீபன் எந்த மேடையில்பேசினாலும்' என தருமை தமிழ் மக்களே! இந்தக்கோட்டையை (யாழ்ப்பாணக் கோட்டை) பாருங்கள். முதலில் போர்த்துக்கீசருடைய கொடிபறந்தது பின்பு ஒல்லாந்தருடைய கொடி பறந்தது பின்பு ஆங்கிலேயனுடைய கொடிபறந்தது. பின்புதமிழனும்சிங்களவனும் ஏற்றிவைத்தகொடிபறந்தது. இந்தக் கோட்டையில் எப்போது தமிழனின் தேசியக் கொடி பறக்கின்றதோ அப்போது தான் தமிழன் சுதந்திர புருஷனாக வாழமுடியும் என்று கூறுவதுண்டு.

**தமிழரசர்கள்**

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்துக்குமுன் யாழ்ப்பாணத்தை சங்கிலியன் என்ற தமிழ் அரசன் ஆட்சி செய்தான். அதனாலேதான் சங்கிலியனின் சிலை யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தையில் வைக்கப்பட்டுள்ளது. இன்னும் இதை எல்லோரும் காணலாம். முன்னர் பரராசசேகரன் என்பவன் யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தான். பின்பு இவனது சகோதரன் செகராசசேகரன் ஆண்டு வந்தான்.

எல்லாளன் என்ற அரசன் அனுராதபுரத்தில் இருந்து அரசாண்டு வந்தான். வன்னிப் பிரதேசமான கற்சிலைமடு என்ற இடத்தில் இருந்து பண்டாரவன்னியன் என்ற அரசன் வன்னியை ஆண்டு வந்தான். பண்டாரவன்னியனை ஆங்கிலேயருக்கு காக்கைவன்னியன் காட்டிக் கொடுத்தான். இன்றும்கூட 'பண்டாரவன்னியனின் இராஜதானியை டொன் டிறி பேக் என்பவரால் கைப்பற்றப் பட்டது' என ஓர் கல்லில் கொத்தி பரந்தன், முல்லைத் தீவு றோட்டில் இருந்து தர்ம புரம் என்ற இடத்துக்குச் செல்லும் சந்தியில் வைக்கப் பட்டிருக்கின்றது.

வன்னி உட்பட அனுராதபுரத்துக்கு வடக்கே இலங்கையின் பாதியை தமிழரசர்கள் ஆண்ட வரலாறு உண்டு. இதைப்புரிந்து கொள்ளாத-அறியாத பாரதியார் 'சிங்களத்தீவு எனக் கூறிவிட்டார்.

**பாலம்**

உண்மைநிலை பாரதியாருக்கும் புரியவில்லை; இலங்கைத் தமிழர்கட்கும் புரியவில்லை. இலங்கை அரசும் இந்திய அரசும் இணைந்து தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்துக்கு பாலம் ஒன்றை அமைத்தால் அது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இருப்பினும், எமக்கு இன்றைய தேவை பாலம் அல்ல. சமாதானமும், சுயநிர்ணய உரிமையும்.

---

## மல்லாகத்தில் பாதீனியவிழிப்பு கருத்தரங்கு

(ஏழாலை)

கீரிமலை விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழுள்ள மல்லாகம்பகுதியில் பாதீனிய அழிப்பும்,விழிப்புணர்வுக் கருத்தரங்கும் அண்மையில் நடைபெற்றது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் நடைபெற்ற மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்கில் விவசாயத்திணைக்கள போதனாசிரியர்கள், யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்கள், பொதுமக்கள் கிராமஅலுவலர்கள் உட்பட பலதரப்பினர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து மல்லாகம் மத்தியில் காணப்பட்டபாதீனியச் செடிகள் எரியூட்டி அழிக்கப்பட்டன. (ஏ-12)

## குற்றப்பணம் செலுத்தஉத்தரவு

(ஊர்காவற்றுறை)

உத்தரவுப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த நபருக்கு 250 ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி பா.பாலசுப்பிரமணியம் உத்தரவிட்டார்நாரந்தனைதெற்கைசேர்ந்தநபர்ஒருவர் குறிப்பிட்ட இடத்தில் உத்தரவு பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்தார் என்று குற்றஞ் சாட்டி ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்படி நபரினை நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்ததை அடுத்தே மேற்படிதீர்ப்பைநீதிபதிஅளித்தார். (உ-75)

## வீடியோ நாடா ஏற்கும் பணி இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தபாலகத்தில்போதியளவு வீடியோ நாடாக்கள் கையிருப்பில் சேர்ந்துள்ளமையினால், கையிருப்பு முடியும் வரை வீடியோ நாடாக்கள் ஏற்றுக்கொள்வதுஇடை நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (உ)

## மொழித்திறன் விருத்தி கருத்தரங்கு

(மந்திகை)

யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் தென்மராட்சிக் கல்விவலயப்பாடசாலைகளில் 6 ஆம் தரத்திற்கு தமிழ் மொழிப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மொழித்திறன்விருத்தி செயற்றிட்டக் கருத்தரங்கொன்று இன்று நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-23-4)

---

பொதுஜன ஐக்கிய முன்னணியும்

# ஆளும் அரசும் காலத்திற்கேற்றவாறு கருத்தொருமித்து செயற்படவேண்டும்

**அமைச்சர்ஆறுமுகம் தொண்டமான்**

(யாழ்ப்பாணம்)

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியும் பரஸ்பரம் குற்றம் சாட்டுவதை விடுத்து யதார்த்தத்தை உணர்ந்து காலத்திற்கேற்ற வகையில் கருத்தொருமித்து செயற்படவேண்டும்.

வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கடந்த வியாழனன்று இடம் பெற்ற பிரதமரின் கொள்கை விளக்கம் தொடர்பானவிவாதத்தில் கலந்து கொண்டுபேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

17 வருட ஆட்சியில் இது தான்இடம்பெற்றது.6 வருட ஆட்சியில் இது தான் இடம் பெற்றது. எனஇரு பெரும் பான்மை கட்சிகளும் ஒருவரை ஒருவர் மாறி மாறி குற்றம் சாட்டுவதால் எந்தப்பலனும் நாட்டிற்கு ஏற்படப்போவதில்லை.

நாடு எதிர்நோக்கும் பிரச்சினையை துல்லியமாக கண்டுணர்ந்து அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் பிரதமர் சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார் அவற்றுக்குப் பக்க துணைவழங்கி 20வருட கால போரின் கொடூரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ)

## அறுபத்திமூவர் மடத்தில் அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

நல்லைஆதீன கலாமண்டப முத்தமிழ் விழா இறுதி நாள் நிகழ்வு, தைப்பூசத்திருவிழா ஆகியனவற்றை முன்னிட்டு நாளை மறுதினம் திங்கட்கிழமை நல்லூர் தேரடியில் அமைந்துள்ள அறுபத்திமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. ((செ)

## நயினாதீவில் கடற்றொழில் வங்கி அமைப்பு வேலைவிரைவில்

(ஊர்காவற்றுறை)

நயினா தீவு வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, கடற்றொழில் வங்கி அமைக்கவென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படிச் சங்கம் கடற்றொழில் வங்கிஅமைப்பதற்கு கடற்றொழில் நீரியல் துறை அமைச்சு ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 125 ரூபாவைஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி கடற்றொழில் வங்கி அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நயினா தீவுப் பகுதிக்கான கடற்றொழில் பரிசோதகர் தெரிவித்தார். (உ-75)

## தைப்பூச தினத்தில் வசந்தமண்டபம் அமைக்கும் பணி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயத்திற்கு வசந்தமண்டபம் அமைப்பதற்கான பணிகள் தைப்பூசத் தினமான நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன. (செ)

வன்னிப்பகுதி விளை பொருட்கள்

## வவுனியா எடுத்துச் செல்ல அரச அதிபர் ஏற்பாடு

(வவுனியா)

வன்னிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்கின்ற பொருட்களை வவுனியா எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசஅதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

திங்கள், புதன், வெள்ளி, ஆகிய நாட்களில் நாளொன்றிற்கு 10 லொறிகளில் வன்னியிலிருந்து வவுனியாவுக்கு விளை பொருட்களை ஏற்றி வர அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்,

இதனால் வவுனியாவில் சில பொருட்களின் விலை குறைவதுடன், வன்னிப் பிரதேச மக்களின் வருமானம் அதிகரிக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை,அரசாங்கத்தின் நூறு நாள் அபிவிருத்தித்திட்டத்தின்கீழ். மடுப் பாதையின் புனரமைப்பு சில தினங்களில் நிறைவு பெறவுள்ளது. ஓமந்தையில் பொருட்கள் ஏற்றி இறக்குவதற்கான நிலையமொன்றுஅமைக்கப்பட்டு வருவதாகவும்அரசஅதிபர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

### யாழ்.சிறைக்கைதிகளை

# விசாரணைக்காக வேறு மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்ல மார்க்கமில்லை

(திருநெல்வேலி)

யாழ். சிறைச்சாலையில் உள்ள சிறைக்கைதிகளை வழக்கு விசாரணைகளின் பொருட்டு வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி சிறையில் உள்ளவர்களில்வவுனியா, கொழும்பு, திருகோணமலை நீதிமன்றங்களுக்கு விசாரணைகளுக்கு சமுகமளிக்க வேண்டியவர்கள் இதுவரை காலமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலமே அழைத்துச் செல்லப்பட்டனர்.

எனினும், தற்போது பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் இவர்களை தமது கப்பலில் அழைத்துச் செல்ல மறுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, இவர்களை சிவில் விமான சேவை மற்றும் படையினரின் விமானம் என்பவற்றில் அழைத்துச் செல்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் பலனளிக்காத நிலையில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் கவனத்தின் கீழ் இது விடயம் கொண்டு செல்லப்பட்டிருப்பதாகசிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க மேற்படி நிலைப்பாட்டினால் குறித்த தவணைகளில் விசாரணைகளுக்கு சமுகமளிக்காத நிலையில் சிறைக்கைதிகளில் பலர், வீணே சிறைச்சாலையில் தமது காலத்தைக் கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-43)

# பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் எண்ணம் அரசுக்கு கிடையாது

## நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கி விடும் எண்ணம் அரசாங்கத்துக்கு கிடையாது.

இந்தச் சட்டத்தை எல்லாச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தாமல் பயங்கரமான குற்றச் செயல்கள் தொடர்பாக மட்டுமே முழுமையாகப் பயன்படுத்த தீர்மானித்திருப்பதாகநீதி, சட்டமறுசீரமைப்பு, தேசிய ஒருங்கிணைப்பு, புத்தசாசன அமைச்சர் டபிள்யூ ஜே. எம். லொக்கு பண்டார கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், இச் சட்டத்தை கட்டாயமாக அமுல்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

எனவேதான், அதி பயங்கர குற்றங்களைச் செய்பவர்கள் தொடர்பாகஇச்சட்டத்திற்கு அமைய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சிறுசிறுகுற்றங்கள் தொடர்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவது குறைக்கப்படும். நூறு நாள் செயற்றிட்டத்தில் இதுவும் அடக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் தொடர்பான வழக்குகளை விரைவில் விசாரணை செய்து முடிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன்,

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் நீதிமன்றம் அமைக்கப்பட்டு விசாரணைகள் துரிதப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். (உ)

### வீதி ஒழுங்கு குறித்து

# பொலிஸ் நிலையத்தில் நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் வாடகை வாகன செலுத்துநர்களுக்கான கலந்துரையாடல் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பொலிஸ் நிலைய அதிகாரி என்.சி.குடாஹெட்டி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் நகரப் பகுதியில் வாகனநெரிச்சல்களை தவிர்க்கும் நோக்குடன் சில வீதிகளை ஒரு வழிப்பாதையாக்கல், தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து வர்த்தகர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (உ-10)

### ச. ச. நிலையம் புனரமைப்பு

(அளவெட்டி)

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன (உ-3)

### இயக்குநர் சபைத்தெரிவு

(ஊர்காவற்றுறை)

காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத் தெரிவு கடந்த சனியன்று இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட பதில் கூட்டுறவு ஆணையாளர் கே. திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், தலைவராக ஆ. சிற்றம்பலம், உபதலைவராக செ. இராமுப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-75)

### ஓராண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழா நாளைமறுதினம்திங்கட்கிழமை மு.ப.9.30மணிக்கு அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருபதி பாலாம்பிகைஸ்ரீ பாஸ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில்1996, 97 ஆம் ஆண்டுப் பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப 10 மணிக்கு இல. 83, றக்கா வீதியில் உள்ள சங்கச் செயலர் வீட்டில் இடம் பெறவுள்ளது.

இதில் அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜெயவர்த்தனா யாழ். வரும்போது மேற்கொள்ளப் படவுள்ளதமது நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்ககளையும் கலந்துகொள்ளுமாறு சங்கச்செயலாளர் சற்குணம் அறிவித்துள்ளார்.

(உ-10)

### யூரோவில்

றது.

இதே வேளை, யூரோ நாணயத்தில் இணையாத ஏனைய நாடுகளான சுவிற்சலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் யூரோநாணயத்தில் இணைவதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பை அடுத்த ஆண்டுகளுக்குள் நடத்தப் போவதாக தெரிவித்துள்ளன.

இந் நாடுகள் கடந்த ஆண்டும் இந்த அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தியமை குறிப்பிடத்தக்கது .(உ-5)


## யாழ்ப்பாணம்-மாநகரசபை பாசையூர் சந்தை மீள்கேள்வி அறிவித்தல் 2002

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான பாசையூர்ச் சந்தையை 09. 02. 2002ந் திகதி முதல் 30. 06. 2002ந் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை 07. 02. 2002ந் திகதி வியாழக்கிழமை பி. ப. 3.00 மணிவரையும் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை08.02.2002ந் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் சேர்க்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2002. 01 25.

(C-3334)



## மக்கள் வங்கியின் விஷேச அறிவித்தல் 1984ம் ஆண்டிற்கு முன் அடகு வைத்து இது வரை மீட்கத் தவறிய வாடிக்கையாளருக்கு

# மீண்டும் ஓர் சந்தர்ப்பம்

பெரும் தொகையான வாடிக்கையாளரின் அன்பான கோரிக்கைக்கு இணங்க 31-12-2001 வரை கொடுக்கப்பட்ட காலக்கெடு 31-03-2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மீட்கத் தவறிய நகைகளை மீட்டுக்கொள்ளுங்கள். முதல் அளவே வட்டி அறவிடப்படும். அடகுச் சீட்டை தவறவிட்டவர்கள்/இறந்தவர்களின் உரிமைக்காரர்கள் எந்த மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்டதோ அந்தக் கிளை முகாமையாளரோடு தொடர்பு கொண்டு 31-03-2002 ற்கு முன் பணத்தைக் கட்டி நகைகளை மீட்டுக்கொள்ளுங்கள் இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

**பிரதேச முகாமையாளர்,**
மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(C/3335)



புலமையாளர் அறிமுகமும்
புத்தகக் கண்காட்சியும்

## மாணவர்களுக்கு புலமைபரிசில் வழங்கலும்

காலம்: 2002-01-27 ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 9.30 மணி

இடம்: யா-நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

பிரதம விருந்தினர்:

திரு. செ. கனகசபாபதி அவர்கள்
(கூ. அ. உ. ஆணையாளர்)

அறிமுகமாகும் புலமையாளர்கள்:

★ மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி
அறிமுகவுரை: திரு. ஆ. சபாரட்ணம் ஆசிரியர் (கந்தர்மடம்)

★ தவத்திரு தனிநாயகம் அடிகளார்
அறிமுகவுரை: புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம்

★ பேராசிரியர் க. கைலாசபதி
அறிமுகவுரை: குப்பிளான் ஐ. சண்முகம்

கலாசார கூட்டுறவுப் பெருமன்றம்
கரவெட்டி கட். நெல். ப. நோ. கூ. சங்கம்

(C–3333)

# இனப்பிரச்சினை தீராமல் கைதடி சைவசிறார் இல்லம்புனரமைப்பில்லை!

## இந்துசமயப் பேரவை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினை தீர்ந்து நாட்டில் சமாதானம் மலரும் வரை தென்மராட்சியில் இயங்கிவந்த இந்து சமயப் பேரவை கைதடி சைவச் சிறுவர் இல்லப் புனரமைப்பு வேலைகளைத் தொடங்குவதில்லை என்று இந்துசமயப் பேரவை முடிவு செய்துள்ளது.

பேரவைத்தலைவர் அருட்கவி சீ.வினாசித்தம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2000ம் ஆண்டில் நடைபெற்ற தென்மராட்சித் தாக்குதலின் போது கைதடி சைவச் சிறுவர் இல்லம் பெரும்பாதிப்புக்கு உள்ளாகியது இவ்இல்லத்தை புனரமைப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் பற்றி முன்னர் வடக்கின் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவுடன் பலதடவைகள் கலந்துரையாடப்பட்டது.

50இற்கு மேற்பட்ட தாய் தந்தையரை இழந்த அல்லது அவர்களால் கைவிடப்பட்ட ஏழைக்குழந்தைகளை போர் முனையில் வாழவைத்துஅவர்களை அழிப்பதற்கு எமது பேரவை ஒருபோதும் விரும்பாது தற்போது ஏழாலையில் இவ்வில்லம் பல சிரமங்களின் மத்தியில் இயங்கிவருவதால் மாற்றேற்பாடாக வேறோர் வசதியான இடத்தில் இவ்வில்லத்தை நடத்துவதற்கு உதவுமாறு அவரிடம் கோரப்பட்டது. எனினும் அத்தகைய உதவி எதுவும் கிடைக்காததால் இந்து சமயப் பேரவை சாதாரண ஏழை மக்களின் உதவியைக்கொண்டு பொருத்தமான ஓர்இடத்தில் இவ்வில்லத்தை அமைக்க தீர்மானித்துள்ளது. இதற்குகுறைந்தது 30இலட்சம்ரூபா தேவைப்படும் எனமதிப்பிடப்பட்டுள்ளது இதற்கான பணத்தைப் பெறும் வகையில்கொடிதினம் ஒன்றை நடத்துவதென்றும் தீர்மானித்தனர்.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின் உரையாற்றிய பேரவைத்தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்கள் இந்தநாட்டில் உண்மைச்சமாதானத்தை நிறைவேற்றுவதே இந்துசமயப் பேரவையின் கடமை. இதனைவலுவூட்டக்கூடிய வகையிற்தான் எமது பணிகள் அமையவேண்டும்.

பேரவை உபதலைவர்பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்பேசுகையில் பேரவையின் இந்தப் பணிக்கு தர்மத்தை நேசிக்கின்ற நமதுமக்கள் தாராளமாக உதவுவார்கள் என்றார்.

இக்கூட்டத்தில் இந்து சமயப்பேரவை செயலாளர் சி.சக்திகிரீவன், கூட்டுறவாளன் க.இ.குமாரசுவாமி,முன்னாள் வர்த்தகசங்கத்தலைவர் த.சற்குணராசா ஆகியோரும் உரையாற்றினார்கள் (வ)

# வாய் முறைப்பாடு வழங்க கிராம அலுவலர்கள் 14 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனோர் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வரும் கொழும்பு, குற்றவியல் விசாரணை திணைக்களப் பொலிஸ் பரிசோதகர் வாய் முறைப்பாட்டைப் பதிவு செய்வதற்காக 14 கிராம அலுவலர்களை யாழ் பொலிஸ் நிலையத்திற்கு எதிர்வரும் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை9 மணிக்கு சமுகம் தருமாறு அழைத்துள்ளார்.

கீழ்க் குறிப்பிடப்படும் சாவகச்சேரிபிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நாவற்குழி வடக்கு. கைதடி தனங்கிழப்பு, கைதடி நுணாவில்- ஜே 309 மீசாலை கிழக்கு ஜே- 319 ஜே-289 பிரிவுகளின் கிராம அலுவலர்களையும்,

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மத்தியூஸ் வீதியாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத்தெரு , கொழும்புத்துறை,ஜே-68 கிராம அலுவலர்களையும், பளைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சோரன்பற்று பி-79 கரவெட்டி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஜே-356 கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அச்சுவேலி செல்வநாயகபுரம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த தும்பளை-அளவெட்டி கிழக்கு பிரிவு கிராம அலுவலர்களையும் தவறாது அன்றைய தினம் சமுகம் கொடுக்குமாறு யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்

(உ-19,9)

# சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஜனாதிபதிக்கு மிகுந்த அக்கறை

## ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் பட்சத்தில் அவர்கள்பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிடுவார்களா! என்பதை உன்னிப்பாக அவதானிக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா கருதுவதாக ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரேன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று செய்தியாளர் மாநாடொன்று இடம் பெற்றது இம் மாநாட்டில் விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் பற்றி விளக்கமளிக்கையிலேயே ஹரேன் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் விடயத்தில் ஜனாதிபதி மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு என்றுமே தயாராக உள்ளார்.

நாட்டின் தலைவி என்ற வகையில் அவர் சமாதானம் ஏற்பட்டு நாட்டில் ஐக்கியம் ஒற்றுமை உருவாகுவதற்கு தடையாக ஒருபோதும்இருக்க மாட்டார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானம் ஏற்பட்டு நாடு சுபீட்சமடைய வேண்டும்என்பதற்காக அவர்1994ம்ஆண்டு முதல் கடுமையாக பாடுபட்டு வருகிறார்.

புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை சரியான திசையில் கொண்டு செல்லாவிட்டால் அது வெற்றியளிக்காது என்றும் ஜனாதிபதி கருதுகிறார் என்று ஹரேன் பீரிஸ் மேலும்கூறினார்.

(இ)

# இராசி பலன்

26.1.2002

(தை13,சனி)

துவாதசி மு.ப9.35வரை

மிருகசீரிடம் மு.ப10.34வரை

ராகுகாலம் 9.36-11.06

சுபநேரம் 3.36-5.06

சித்தம், சனிப்பிரதோச விரதம்

**மேடம்**

நினைத்தகாரியம்கைகூடும், அன்னியர்சந்திப்பு, வாக்கு மேன்மை,பிரயாணநன்மை

**இடபம்**

தனவிரயம்,மாதர் நட்பு, முயற்சிதாமதம்,தொழில் கஷ்டம்

**மிதுனம்**

மங்களம், முயற்சிகைகூடும் சயனசுகம்,பெரியோர்மதிப்பு

**கடகம்**

காரிய அலைச்சல்,வீண் செலவு,பங்காளிகள்மனஸ்தாபம்,சயனசுகக் குறைவு

**சிங்கம்**

காரிய அனுகூலம், தனவரவு,பெருமையடைதல், தொழில் நன்மை

**கன்னி**

கடினமுயற்சி,நல்லசெய்தி, முயற்சிகைகூடும், பிறர்உதவி

**துலாம்**

பிரயாணம்,முயற்சிதாமதம்,கட்டுப்பாடு,புதிய தொழில் சிந்தை

**விருச்சிகம்**

எதிர்பாராதபிரச்சினை' உடல்வியாதி,திடீர்நன்மை, பிரயாணபயம்

**தனு**

ரநண்பர்கள் சந்திப்பு,சுவாஸ்யம்,பொருள் சேர்க்கை காரியம்கைகூடும்

**மகரம்**

தொழில்விருத்தி,முயற்சி நிறைவேறும், சந்தோசமான சம்பவம்,உடல்நலம்

**கும்பம்**

குடும்பக்கவலை,வீண் வார்த்தை,காரியதாமதம்,தாழ்ந்தசுபாவம்

**மீனம்**

உடல்சோர்வு,மனக்குழப்பம், தொழில்முன்னேற்றம், தாய்வழிஉறவு

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# சுகாதாரத்தை பேணுவதற்கு மக்கள் உதவவேண்டும்

## யாழ். மாநகர முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைப் பகுதிக்குள் வீதிகளில் குப்பைகளைக் கொட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் செ.கந்தையன் அறிவித்துள்ளார்.

வீதிகளில் குப்பைகளைக் கண்டபாட்டில் கொட்டுவதால் ஏற்படுகின்ற சுகாதார சீர்கேட்டை உணர்ந்து பொதுமக்கள் செயலாற்ற வேண்டும் மெனவும், வீதிகளில் குப்பைகளைச் சேர்த்து வைத்து யாழ் மாநகரசபையின் சுத்திகரிப்பு பகுதிக்கு அறிவிப்பதன்மூலம் சிறுகட்டணத்துடன் அவற்றை அகற்றுவதற்கான ஒழுங்குகள்செய்யப்பட்டுள்ளதாகவும் முதல்வர் கந்தையன் மேலும் தெரிவித்தார் (ந)

## நிர்வாகசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன், தகுதிகாண் ஆசிரியர் நியமனத்திலுள்ள பட்டதாரிகளுக்கான கலந்துரையாடலும் அன்றைய தினம் மு. ப. 10.00 மணிக்கு இல. 34 மாரியம்மன் வீதி, திருநெல்வேலியிலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் வே. மணிமாறன் அறிவித்துள்ளார்.(உ)

## உரும்பிராய் இந்துவில் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்தஒன்றுகூடல் இன்று நண்பகல் 12 மணிக்கு கல்லூரி மண்டபத்தில். மன்றத் தலைவர் செல்வன் பிரதாபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்பல்கலைக்கழக வர்த்தகத்துறை விரிவுரையாளர் ரீ.வேல்நம்பி பிரதமவிருந்தினராகவும் கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஏ.கதிரமலைநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ)

## பாலர் பாடசாலை விரைவில் அமைக்கப்படும்

(மானிப்பாய்)

கல்வியங்காடு ஸ்ரீ வாலையம்மன் ஆலயத்திற்கு அண்மையில் வாலையம்மன் சனசமூக நிலையத்தினால் இப்பகுதி பாலர்களின் எதிர்கால நன்மை கருதி பாலர் பாடசாலை விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

(செ-232)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்திவினைத்திறன் தையல்,மனையியல் பொருள் கண்காட்சி எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி கிழக்கு ஜி.ரி.சற் நிறுவனகட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

(உ-10)

## இன்று சொற்பொழிவு

உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு, ''ஜீவன் பிரம்மம் ஐக்கிய வேதாந்த ரகசியம்'' எனும் பொருள் பற்றி வைத்திய கலாநிதி வ. சின்னப்பு அவர்கள் சொற்பொழிவு ஆற்றுவார். (இ)

## ஊனமுற்றோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

புலோலியில் இயங்கும்பளை பிரதேச செயலகப் பிரிவில் எதிர்வரும் 30திகதி ஊனமுற்றோர் தின விழா நடைபெற ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளது. இவ் விழாஇன்றுநடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேசசெயலர் எஸ். புத்திசிகாமணி தெரிவித்துள்ளார் (இ)

# ரெலிக்கொம் பணிப்பாளர் வடமராட்சிக்கு விஜயம்

(யாழ்ப்பகணம்)

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சுஹேஅனான் வடமராட்சி கரவெட்டியில் புதிதாக அமைக்கப்படவுள்ள தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தை நேரில்சென்று பார்வையிட்டார்.

கரவெட்டியில் புதிய தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டபின் சுமார்ஆயிரம்தொலைபேசி இணைப்புக்கள் வடமராட்சிப் பகுதிக்கு வழங்கப்படவுள்ளது.

வடமராட்சிப் பகுதிக்குச் சென்ற சுஹேஅனான் பருத்தித்துறை நகரப்பகுதிக்கும் விஜயம்செய்து தொலைபேசி இணைப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்தார். இதனைத் தொடர்ந்து சுன்னாகம் பகுதிக்கும் அவர்விஜயம் செய்தார்.

சுஹேஅனானுடன் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத் தலைவர் எஸ்.கனகசூரியர் பொறியியலாளர்எஸ் அன்ரன் பிரதிப்பராமரிப்பு அதிகாரி ஜமற்றா பாதுகாப்பு ஆலோசகர் மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா ஆகியோரும் சென்றிருந்தனர்.

ஒருநாள்விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த சுஹேஅனான் இன்று காலை கொழும்பு திரும்புகிறார்- (வ)

## போயா தின ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை போயாதினத்தை முன்னிட்டு காலை 9.00 மணிக்கு ஓம்காரம், காயத்திரி மந்திர ஜெபம், தியானம், பண்ணிசை, சொற்பொழிவு ஆகிய ஆன்மீக நிகழ்வுகள் இடம் பெற்று நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறவுள்ளது.

(செ)

## பாதுகாப்பு

தமக்கு இராணுவத்தின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை ஆராய்ந்த பிரதமர் ரணில் இராணுவப்பாதுகாப்பு வழங்க முடியாதென்றும், பொலிஸ்பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார் (வ)

# பாராளுமன்றத்திற்குள் வருவதற்கு ஜனாதிபதிக்கு அனுமதிதேவையில்லை

## சபாநாயகர் விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிப திசந்திரிகாகுமாரதுங்கா எவரது அனுமதி இன்றியும் பாராளுமன்ற உறுப்பினர்களைப் போல் எந்நேரமும் பாராளுமன்றத் திற்கு வந்து போகலாம் என்று சபாநாயகர் ஜோசப்மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா அண்மையில் பாராளுமன்றத்தில் உள்ள தனது அலுவலகத்திற்குச் சென்றது தொடர்பாக ஆளும் கட்சியின் பின் வரிசை உறுப்பினரான சந்திரா மன்திலக சபாநாயகரிடம் கேள்வி ஒன்றை எழுப்பி இருந்தார்.

அவரது கேள்விக்குப் பதிலளித்த சபாநாயகர் ஜனாதிபதி பாராளுமன்றம் வருவதற்கு யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை எனக் கூறினார். (வ)

## திருப்பாலத்துவ சபைத்தினம்

(மானிப்பாய்)

கத்தோலிக்க திருச்சபை, நாளை ஞாயிற்றுக்கிழமை சிறுவர்களுக்கான திருப்பாலத்துவ சபைத்தினத்தைக் கொண்டாடுகின்றது'

இத்தினத்தையொட்டி அன்று தேவாலயங்களில் திருப்பலியுடன்கூடிய விஷேட வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (செ-232)

## தாதியர் உயர்பதவி பரீட்சை முடிவுகளில் யாழ்.ஆஸ்பத்திரி முன்னணி

(சுண்டுக்குளி)

2001 ஆண்டு நடைபெற்ற தாதிய உத்தியோகத்தர்களுக்கிடையேயான தாதியர் உயர் பதவிக்கான போட்டிப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன்படி யாழ். போதனா வைத்திய சாலையைச் சேர்ந்தகணபதி முருகமூர்த்தி மாவட்டரீதியில் முதலாம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 3 ம் இடத்தையும் பெற்று விசேட சித்தி பெற்றுள்ளார்.

மாவட்ட மட்டத்தில்2 ஆம் 3 ஆம் இடங்களை முறையே எஸ். இரவீந்திரன், ரி. உதய குமார் ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்கள் மூவரும் யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையிலேயே தமது அடிப்படைத் தாதிய பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து யாழ். போதனாவைத்திய சாலையில் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களிற்கான நேர் முகப்பரீட்சை விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளது. (உ-110)

## புலமையாளர் அறிமுகமும் புலமைப் பரிசில்வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ.சங்கம் நடத்தும் புலமையாளர் அறிமுகமும் புத்தகக் கண்காட்சியும் நாளை மு. ப. 9. 30மணிக்கு யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கூ. அ. உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து புலமையாளர்களான மௌனத் தவமுனிவர் பொ. கைலாசபதி, தவத்திரு தனிநாயகம் அடிகளார் பேராசிரியர் க. கைலாசபதி ஆகியோர் குறித்த அறிமுக அரங்கும்,

2001 ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்கத் தொழில் பரப்பில் வசிக்கும் 54 மாணவர்களுக்கும்,

2001ஆம் ஆண்டு க. பொ. த. உ/த பரீட்சையில் அதி திறமைச் சித்தியடைந்த 20 மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (உ)

### மீனவர்களின் போராட்டத்திற்கு

## ஈ. பி. ஆர். எல். எவ். பரிபூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

மக்களின் பிரச்சினைகளுக்கு நாளாந்த நிவாரணக் கொடுப்பனவே தீர்வாக இருக்கும் போக்கை நிறுத்தி அவர்கள் சுயாதீனமாக வாழும் வகையை ஏற்படுத்தும் விதமாக, காலந்தாழ்த்தாது உடனடியாக வடக்கு-கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாவில் மீனவர்கள் அனைவரும் அவர்களின் தொழில்களைச் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் மேற்கொள்வதற்கு அரசு அனுமதிக்க வேண்டும். அத்துடன் அதற்குரிய பொருளுதவிகள் மற்றும் கடனுதவிகளையும் தாராளமாக அரசு வழங்குதல் வேண்டும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஏறத்தாழ ஒருதசாப்தத்திற்கு மேலாகத் தொடரும் மீன்பிடித்தடைகள் தற்போதாயினும் நீக்கப்படுவது அவசியமானதும் நியாயமானதுமாகும்

20 வருட யுத்தம் வடக்குக் கிழக்கின் மரபு ரீதியான தொழில்களான விவசாயத்தையும், மீன்பிடியையும் பாரதூரமாகப் பாதித்துள்ளது.தொடர்ந்த யுத்தத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட பல்வேறு தடைகள் இத் தொழில்களில் ஈடுபடும் மக்களில் பெரும்பாலோரின் அடிப்படையான சமூகபொருளாதார வாழ்வை ஆட்டங்காணச் செய்துள்ளன.

யுத்தத்தில் ஈடுபட்டு வரும் இருபகுதியினரும் தற்போது யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதோடு, புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளபகுதிகள் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு வரும் இவ்வேளையில் மீன்பிடித்தடைகள் தொடர்வது அர்த்தமற்றதாகும்.

வடக்கு- கிழக்கு மக்களின் வாழ்வில் மீள் நிர்மாணம்என்பது இத் தொழில்களின் புத்துயிர்ப்பிலேயே தங்கியுள்ளது

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக எமது வடக்கு கிழக்கின் மீனவமக்கள் தொடர்ந்து துன்பங்களையே அனுபவித்து வந்துள்ளனர். கடலில்பல்வேறு தடவைகள் பல நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதேவேளை கரையிலும் அவர்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர்.

மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகளுடன் ஒப்பிடுகையில் மற்றவை இரண்டாம் பட்சமானவை என்று அரசு கூறி வருகின்ற போதிலும் அது தொடர்பாக நடைமுறையில் அக்கறையற்று இருப்பது முரணானதாகும்.

மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கி வாக்குகளைப் பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது மீனவர்களின் பிரச்சினைகளைப் புறக்கணிப்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

எனவே மக்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும் இவ்விடயத்தில் காலம் தாழ்த்தாது அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் மீன்பிடித் தடையை நீக்கக் கோரி வடமராட்சி மீனவர்கள் எதிர் வரும் 30ம் திகதி நடத்தவிருக்கும் போராட்டத்திற்கு எமது பரிபூரண ஆதரவை வழங்குவோம் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கிறோம் என்று குறிப்பின்ப்பட்டுள்ளது.

### மெய்வல்லுநர்

## போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பி.ப 1.00 மணிக்கு அதிபர் ந.பரமசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான, கலாநிதி சி.ஸ்ரீசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் பூ.புலேந்திரராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-3)

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக செயலாளர் எஸ். சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (உ-106)

## தோமஸ் அடிகள்

### நினைவுதினம்

(ஈச்சமோட்டை)

பாண்டியன் தாழ்வு தவத்திரு தோமஸ் அடிகளின் 38 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று பாண்டியன் தாழ்வு தோமஸ் இளைஞர் மன்றத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கத்தோலிக்க திருச்சபையினால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ள ஒரே ஒரு இலங்கையர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-59)

## குற்றப்பணம் அறவீடு

(ஊர்காவற்றுறை)

அனுமதியின்றி பசு மாட்டிறைச்சியை விற்பனைக்காக எடுத்துச் சென்ற நபரிடம் 250 ரூபா குற்றப்பணமாக அறவிடுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ-75)

## விபத்துக்களில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இருவேறு மோட்டார்சைக்கிள் விபத்துக்களில் காயமடைந்த இருவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தப்பிமுத்து பகீரதன் (வயது 20) என்பவரும் மண்டைதீவுப் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் இடம்பெற்ற விபத்தில் எஸ். செல்வக்குமார் (வயது30) என்பவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-10)

### அனலை தீவில்

## திருடர்களால் தொல்லை

(அனலைதீவு)

அனலைதீவுப் பகுதியில்திருடர்களின்தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் அப்பகுதி மக்கள்பெரும்விசனமடைந்துள்ளனர்.

திருடர்கள் தோட்ட வேலிகளைப் பிரித்துவிடுவதனால், கட்டாக்காலிகள் பயிர்களை மேய்ந்து விடுகின்றன.

இதனால் பாடுபட்டுபயிரிட்டவர்கள் பலன்பெறமுடியாது கவலை கொண்டுள்ளனர் (செ-240)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீன கலாமண்டப திறப்பு விழாவின்போது ஈ.எஸ். பேரம்பலம் நாகரெத்தினம் அம்மண்டபத்திற்கு புதிய சுவர் மணிக்கூடு ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். (செ)

### கொல்கொத்தா

## தாக்குதலுக்கு பொறுப்பு துபாயில்உள்ள இந்தியராம்

(கொல்கொத்தா)

துபாயிலிருக்கும் இந்தியர் ஒருவரேகொல்கொத்தாவில் இருந்தஅமெரிக்கத் தூதரகம் மீதான தாக்குதலுக்குப் பொறுப்பானவர் என்று இந்திய அரசுசந்தேகிக்கிறது.

இந்தியாவின் வாரணாசியைச் சேர்ந்தவரும் தற்போது துபாயில் வாழ்பவருமான தாரஸ் குஜராத்தில் நிகழ்ந்த ஒரு மோதலில்தனது சகாக்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாகவேஇத்தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இத்தாக்குதல் தொடர்பாக வடக்கு பருதானமாவட்டத்திலிருந்து மேலும்12பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (து)

### ஆபத்தில் சிக்கிய

## ஆப். இடைக்கால தலைவர் பாதிப்பின்றி தப்பினார்

(டோக்கியோ)

ஆப்கானிஸ்தானின் இடைக்காலஅரசுத்தலைவர் ''ஹமீர் ஹர்ஸாய்'' பயணம்செய்த வாகனம் ஜப்பான் தலைநகரில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இவ்விபத்தில் ஹர்ஸாய் எதுவிதகாயங்களும் இன்றி உயிர்தப்பியுள்ளார்.

ஆப்கானுக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள ஜப்பான் சென்றிருந்த வேளையே இவ் விபத்து நேர்ந்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, யுத்தத்தினால் பாதிப்படைந்த ஆப்கானிஸ்தானுக்கு 450 கோடி அமெரிக்க டொலரை வழங்குவதற்கு, உதவிவழங்கும் நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் முன்வந்துள்ளன.

மேலும் புதிதாக உருவாகிவரும் ஆப்கானிஸ்தானுக்கென தேசியப்படையை அமைக்கவுள்ளதாகவும் அந்நாட்டின் படைத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-7)

## 4-வது, 1 நாள்போட்டியில் இந்திய மகளிர்அணிவெற்றி

(டில்லி)

இந்தியா- இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையேயான 4 ஆவது ஒரு நாள் போட்டியில் இந்திய மகளிர் அணி 5 விக்கெட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முதலில்துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து மகளிர் அணி 47. 5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து,142 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குதுடுப் பெடுத்தாடிய இந்திய அணி41.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதன் மூலம் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட இந்த தொடரில் 4 போட்டிகளில் இந்திய அணி வென்று முன்னணியில் உள்ளது. (செ-10)

### ஆண்டிப்பட்டி தொகுதியில்

## தேர்தலை பிற்போடுமாறு தி.மு.க வழக்கு தாக்கல்

(சென்னை)

ஆண்டிப் பட்டி தொகுதித் தேர்தலைத் தள்ளிப் போடும்படி தி.மு.க உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இத் தொகுதியில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் செல்வி ஜெயலலிதா வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

தி.மு.க வேட்பாளர் வை. தே. சேகர்வேட்பு மனுத் தாக்கல் செய்த போதிலும் உச்ச நீதிமன்றத்தில் தேர்தலைப் பிற்போடும் படி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் வாக்காளர் பட்டியலில்17 ஆயிரம் போலி வாக்காளர் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளனவென்றும்வாக்காளர் இடாப்பை சீர்செய்வதற்காக தேர்தலை ஒத்திப் போடும் படியும் தேர்தல் ஆணையம் கட்டளையிட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (து)

# இன்று ஒரு தகவல்

## புகழ் மயக்கம் ஆகாது

'புகழுக்கு மயங்காதவர் யார் இந்த உலகத்தில்?' ஒருவரைப் பார்த்து இன்னொருவர் சொன்னார், சார்! இந்த அகில உலகத்திலும் புகழுக்கு மயங்காதவர் நீங்கள் ஒருவர் தான் சார் என்றார். இதைக்கேட்டதும் அவர், 'அப்படியா? மிக்க நன்றி' என்று சொல்லி அசடு வழிந்தார். அப்படியென்றால் என்ன அர்த்தம்? அதற்கே அவர் மயங்கிவிட்டார் என்று அர்த்தம். இரண்டுபேர் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த இரண்டுபேரில் ஒருவரிடம் பணம் அதிகமாக இருந்தது. இன்னொருவரிடம் அறிவு அதிகமாக இருந்தது. இவை இரண்டும் ஒரே இடத்தில் இருப்பது தான் அபூர்வமாச்சே!

பணம் அதிகமாக வைத்திருக்கிறாரே.. அவருக்கு ஒரு ஆசை! யாராவது நம்மைப் புகழமாட்டார்களா? என்று. பக்கத்தில் இருக்கிற அறிவாளியோ மிகவும் ஏழை 'இவரிடம் காசு கொடுத்தாவது நம்மைப்புகழவைப்போம்' என்று நினைத்தார். அந்த ஏழையைப் பார்த்து 'இதோ பார் என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் இருக்கின்றன. அதில் ஒரு நூறு பொற்காசுகளை உன்னிடம் தருகிறேன். நீ கொஞ்சம் என்னைப் புகழ்ந்து பேசவேண்டும். செய்வீரா?' என்று கேட்டார். 'இது நேர்மையான பங்கீடு இல்லை! நீங்கள் பங்கு போடுவதில் நேர்மையில்லாததினால் நான் உங்களைப் புகழ்ந்து பேசமாட்டேன்!' என்றார் அவர்.

அப்படியா சொல்கிறாய்? சரி... அப்படியென்றால் ஆளுக்குப் பாதியாக எடுத்துக்கொள்வோம். என்னிடம் இருப்பது ஆயிரம். உனக்கு 500, எனக்கு 500 என்று பிரித்துக்கொள்வோம். இப்போதாவது என்னைக் கொஞ்சம் புகழ்ந்துபேசுவீரா? என்று கேட்டார். இவர் பார்த்தார் 'என்னிடம் 500, உன்னிடம் 500 இருந்தால் நாமிருவரும் சமம் என்றுதானே அர்த்தம். அப்படியிருக்கும்போது எனக்குச் சமமாகப் பணம் வைத்திருக்கிற உங்களை நான் எப்படிப் புகழ்ந்து பேசமுடியும்' என்றார்.

சரி, நான் வைத்திருக்கிற அவ்வளவையும் உன்னிடம் கொடுத்துவிட்டால் அப்போதாவது என்னைப் புகழ்ந்து பேசுவாயா? என்று கேட்டார் அவர். நீங்கள் உங்களிடம் இருக்கிற எல்லாவற்றையும் கொடுத்துவிட்டால் நான் செல்வந்தனாய் விடுவேன்! நீங்கள் ஏழையாய் விடுவீர்கள். செல்வந்தனான நான், ஒன்றுமே இல்லாத ஏழையாகிய உங்களை எப்படிப் புகழ்ந்து பேசுவேன்? என்றார் இவர். அதுவும் நியாயம் தானே!

ஒன்றுமில்லாதவனைப் புகழ்ந்து என்ன ஆகப்போகிறது. இப்போதுதான் அந்தப் பெரிய மனிதர் யோசித்தார். நாம் என்ன செய்தாலும் இந்த ஏழையின் வாயிலேயிருந்து புகழ்மொழிகளை வாங்க முடியாது என்று புரிந்து கொண்டார். புகழ்மொழிகளை விலைக்கு வாங்கிவிடமுடியாது. அப்படி வாங்கவேண்டுமென்று நினைத்தால் அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. புகழ் என்பது தானாக வந்து சேரவேண்டும் என்றால் அதற்குத் தகுந்த மாதிரி நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். அதுதான் முறை. அதை விட்டுவிட்டு, காசு கொடுத்து புகழ வைக்கிறதோ ... கடதாசியில் அச்சடித்து சுவரில் ஒட்டுவதோ .. எத்தனை நாளைக்கு நிலைக்குமென்று நினைக்கிறீர்கள்?.

ஒருவன் அப்படித்தான் ஒரு சுவரில் பெரிய போஸ்டர் ஒன்றை ஒட்டிக் கொண்டிருந்தான். கிட்டப் போய் அந்தப் போஸ்டரில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தேன். 'பிறந்த நாள்காணும் பெரியவரே...நீங்கள்வாழ்க பல்லாண்டு!' என்று எழுதியிருந்தது. நான் அந்த ஆளைப்பார்த்து, 'ஏன். நீங்கள் பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்க வேண்டுமென்றால், நேராக அந்தப் பெரியவரையே பார்த்துச் சொல்லக் கூடாதா? இப்படி இந்தச் சுவரில் உங்கள் வாழ்த்தைப் பசை தடவி ஒட்டுகிறீர்களே-நீங்கள் இங்கு இப்படி ஒட்டுவது அந்தப் பெரியவருக்குத் 'தெரியுமா?' என்று கேட்டேன். 'தெரியும்' என்றார். 'எப்படி?' என்றேன். 'அந்தப் பெரியவரே நான்தானே' என்றார் அந்த ஆள்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்.

# யுத்த நிறுத்த மீறல்களில் புலிகள் ஈடுபடுகின்றனர்

## சிஹல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து வன்னிப்பகுதிக்கு பெற்றோல், டீசல் ஆகியஎரிபொருட்களை விடுதலைப்புலிகள் கடத்திச் செல்வதாக 'சிஹல உறுமய' கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதற்கு உடந்தையாகச் ஸ்ரீலங்கா அரசும்இந்தியாவில் சில ஆதரவாளர்களும் செயற்படுகிறார்கள் எனவும் அக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி அதிகாலைமுல்லைத்தீவு ஆழ்கடற் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டவேளை, விடுதலைப்புலிகளின் 6 படகுகள் கரையைநோக்கி சென்றதையும் அவற்றில் எண்ணெய் பரல்கள் இருந்ததை கடற்படையினர் அவதானித்திருந்தனர் என்றும்,

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த கால மீறல் நடவடிக்கைகள் அடங்கியஅறிக்கையை இன்னும் ஒருசில தினங்களில் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

(உ-7)

## உட்கட்சிப் பூசல்களால்

# ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா எதிர்க்கட்சி தலைவர் பதவியிலிருந்து விலகினார்?

(கொழும்பு)

எதிர்க் கட்சித்தலைவர் பதவியிலிருந்து முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா விலகியுள்ளதாகவும் அவருக்குப் பதிலாக றிச்சட் பத்திரனவும், கட்சியின் பதில் அமைப்பாளராக தினேஸ் குணவர்த்தனாவும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலர் டி.எம்.ஜெயரத்தின முற்றாக மறுத்துள்ளதுடன் கட்சியை குழப்பும் முகமான சிலரின் புனைகதையென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை நீக்கிவிட்டு பதிலாக மஹிந்தராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என முன்னாள் அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளே தெரிவித்துள்ளார்.

இக்கருத்தையே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக எதிர்க்கட்சித்தலைமை தொடர்பாக கட்சிக்குள் அதிருப்தி நிலவி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது (உ-4)

## பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சினால் 1999 ஆம் ஆண்டு, வண். கொண்டலடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை ஊடாக யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்ட சைவ சமய போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான பரிசில், சான்றிதழ் வழங்கல் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

(செ

## கந்தர்மடம் பகுதியில் 3 துவிச்சக்கரவண்டிகள் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மூன்று துவிச்சக்கர வண்டிகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் உள்ளதாகவும் இவற்றை தகுந்த ஆதாரம் காட்டி உரியவர்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ். பொலிஸ் நிலைய அதிகாரி அறிவித்துள்ளார்.

கண்டெடுக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளின் இலக்கங்கள் வருமாறு:-

- ஈ. எக்ஸ்.4317-லுமாலா
- எச். எஸ். 205060 கீறோ
- 55785796- லுமாலா

துவிச்சக்கர வண்டிகளை நேற்று முன்தினம் பி.ப. 2.00 மணியளவில் மேற்படி பகுதியில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

(உ- 10,19)

## வைத்தியசாலை ஊழியரின் சம்பளப்பணம் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சம்பளப்பணம் 25 லட்சம் ரூபா ஆயுத பாணிகளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பி. ப 2.00 மணியளவில் வைத்தியசாலையின் நிறைவேற்று அதிகாரிகளினால் வங்கியிலிருந்து பணம் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் வைத்தியசாலை வளவிற்குள் நோயாளர் போன்று வேடமிட்டமூவர்திடீரென துப்பாக்கியைக் காட்டி பணத்தினை அபகரித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்ட பகுதியில் இவ்வாறான ஆயுத பாணிகளின் அட்டகாசம் அதிகரித்துவருவது குறித்து பொலிஸார் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

(உ-7)

## கட்டடத் திறப்பு விழா

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நாளை பி.ப. 3 மணிக்கு நிலையத்தின் தலைவர் க. பிரபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ. அன்ரன் ஜோன்சன் கலந்துகொள்ளவுள்ளார்.

(உ-232)

## தையல் கண்காட்சி

(அல்லைப்பிட்டி)

வேலணைப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆதரவில், எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை தையல் கண்காட்சி மேற்படி காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(உ-231)

## நிர்வாக சபைதெரிவு

(ஏழாலை)

ஏழாலை மேற்கு உதய சூரியன் சனசமூக நிலையத்தின் நடப்பு ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள்தெரிவு அண்மையில்இடம் பெற்றது.

கிராம சேவையாளர் சி. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் 17 அங்கத்தவர்களைக் கொண்ட புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்ட போது, தலைவராக சி. செல்வராசா, செயலாளராக எ.பி.செல்வராசா, பொருளாளராக கு. முருகதாஸ் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். (உ-12)

## சிந்தனைக்கு விருந்து

'உன் அம்மாவை அழை'

பிள்ளைப் பெறுபார்க்கப் பிள்ளை பராமரிக்க
அள்ளிக் கொடுக்களமக் காகாது - மெள்ளப்
பசையடித்துன் அம்மாவைப் பத்தாறு மாதம்
இசையவைத் திங்கே அழை.

'பழையவன்'

## தையல் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு மகளிர் கலாசார மண்டபத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரனால் தையல் பயிற்சி நிலையம் ஒன்றுஆரம்பித்து வைக்கப்பட்டது.

(உ)

## நேர்முகப் பரீட்சை

(சண்டிலிப்பாய்)

யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் 2002 ஆம் கல்வியாண்டிற்கான பகுதிநேரவிரிவுரையாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

(உ-125)

# பிரதி சபாநாயகர் பதவி சபையில் வாதப்பிரதிவாதம்

(கொழும்பு)

பிரதிச் சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிகளுக்கு வழங்கும்நோக்கத்துடனேயே அது வெற்றிடமாக வைக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், பொ.ஐ.மு. அப்பதவியை ஏற்றுக்கொள்வதில்லை எனத் தீர்மானித்திருக்கிறது.

கடந்த புதனன்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போது மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. தினேஷ் குணவர்த்தன இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்; எதிர்க்கட்சி வரிசையில் வேறு கட்சிகளும் இருக்கின்றன எனச் சுட்டிக்காட்டி இது தொடர்பாகசபாநாயகர் தனது தீர்ப்பை வழங்கவேண்டும் என்றும்கேட்டுக்கொண்டார்.

இதற்கு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க பதிலளிக்கையில்; கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டஒரு தீர்மானத்தின் பேரில் பிரதி சபாநாயகர் பதவி நிரப்பப்படாமலிருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் தீர்மானித்தால் அந்த வெற்றிடம் நிரப்பப்படும் என்றும் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக சபாநாயகரும் தனதுகருத்தை முன்வைத்தார். (உ)

## வன்முறைகளற்ற சமாதானப் பாதையில் பயணிக்க

# நாமனைவரும் பாடுபட வேண்டும்

### புனித பாப்பரசர் அறைகூவல்

(ரோம்)

வன்முறைகள் மற்றும் வன்செயல்களை எல்லா சமூகத்தினரும் நிராகரிக்க வேண்டுமென புனிதபாப்பரசர்இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இத்தாலியில் நடைபெற்ற சகலமதங்களினதும்சமாதானத்திற்கான பிரார்த்தனையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்முறை சரியான பாதையென்று எந்த மதமும் எப்போதுமே போதித்தது கிடையாது.

நாம் எல்லோரும் வேண்டி நிற்பது சமாதானமே. எனவே நாம்ஒவ்வொருவரும் அதற்காகப் பாடுபட வேண்டுமென்று கூறினார்.

இச் சமாதானத்திற்கான பிரார்த்தனையில் 200இற்கும் மேற்பட்ட மதப்பிரமுகர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் கலந்து கொண்டனர்.

(உ-5)

## ஜெயாவுக்குப் பின்னால் விரைந்த 300கார்கள்

(சென்னை)

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வேட்புமனுத்தாக்கல் செய்யும் இறுதித்தினமான நேற்றுமுன்தினம் திடீரென மதுரைக்கு சென்றமையால் செய்தியாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மதுரைக்கு சென்ற சமயம் ஜெயலலிதாவின் காருக்குப் பின்னால் 300 இற்கும் அதிகமான கார்கள் விரைந்தன. இதனால்மதுரைக்கு செல்லும் வீதியில்பெரும்போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயலலிதா மதுரைக்குச் சென்ற பின்னர்வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக ஆண்டிப்பட்டி தேர்தல் தொகுதிக்குச் சென்றார்.

அப்போது ஆதரவாளர்கள் கரகாட்டம் குயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளுடன் அவரை வரவேற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5

# உலக தரிசனம்

### பிரிட்டன்

## மகாராணியின் தாயாரின் வெளி அலுவல்கள் ரத்து

(லண்டன்)

பிரித்தானிய மகாராணியின் தாயார் தனது சகல வெளி அலுவல்களையும் ரத்துச் செய்துள்ளார்.

101வயதான இவர், கடந்த டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ் தினமன்று ஒருவகை பூச்சிகடியினால் நோய்வாய்ப்பட்டார்.

இதனை அடுத்து அவரின் வெளிப்பயணங்கள் உட்பட சகல வெளி அலுவல்களையும் தற்போது ரத்துசெய்துள்ளார். (உ-7)

## 'யாழின் புலம்பல்' நூல் கனடாவில் வெளியீடு

(ரொறன்ரோ)

ஈழத்து தமிழ் சிறுகதைகளும் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு (Lute's Lament) யாழின்புலம்பல் என்ற பெயரில் கனடா ரொறன்ரோ சவுத் ஏசியன் ரிவியூ சஞ்சிகையின் வெளியீடாக வரவுள்ள இந்நூலின் வெளியீட்டு விழா அடுத்த மாதம்நடுப்பகுதியில்ரொறன்ரோவில் நடைபெறவுள்ளது.

'காலம்' சஞ்சிகையும், ரொறன்ரோ சவுத் ஏசியன் ரிவியு சஞ்சிகையும் இணைந்து இவ்விழாவினை நடத்தவுள்ளன.

இந்நூலில் 12 சிறுகதைகளும் 30கவிதைகளும் அடங்கியுள்ளன ஏ. ஜே. கனகரத்னா கவிஞர் சோ.பத்மநாதன்' மு.நித்தியானந்தன் முதலியோர் இவற்றினை மொழிபெயர்த்துள்ளனர்.

(எ)

## கொல்கொத்தா தாக்குதல் பாகிஸ்தான் மறுப்பு

(புதுடில்லி)

கொல்கொத்தாவில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற தாக்குதலுக்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லை என்று பாகிஸ்தான்தெரிவித்துள்ளது

இந்தியப்புலனாய்வுப் பிரிவினர் இச்சம்பவம் பற்றி விசாரணை மேற்கொண்ட போது மேற்படி தாக்குதலுக்கும் பாகிஸ்தானுக்கும்நெருங்கிய தொடர்பு இருப்பதாக தெரிவித்ததன் பிரகாரமே பாகிஸ்தான் அதனை மறுத்துள்ளதுடன்,

இவ்வாறான அறிக்கைகள் சர்வதேச கண்ணோட்டத்தை மாற்றும்செயல்என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொல்கொத்தாவில் இடம் பெற்றதாக்குதலில் 5பேர் பலியானதுடன் 25பேர் படுகாயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## அமெரிக்க தூதரகதாக்குதல் புலனாய்வு அதிகாரிகள் இந்தியா விரைவு

(புதுடில்லி)

இந்தியாவினகொல்கொத்தா நகரில் அமைந்திருந்தஅமெரிக்கத் தூதரகம் தாக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை நடத்த அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் புதுடில்லிக்கு விரைந்துள்ளனர்.

அமெரிக்க தூதரக முக்கிய அதிகாரி ஒருவரை இலக்கு வைத்தே இத் தாக்குதல்நடத்தப்பட்டதாக அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் சந்தேகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலில் அமெரிக்கர்கள் எவரும் பாதிக்கப்படாத போதிலும் இச் சம்பவந்தில் 5 பொலிஸார் கொல்லப்பட்டதுடன் 25 பொது மக்கள் காயமடைந்தது தெரிந்ததே.

இத் தாக்குதலில் அமெரிக்கத் தூதரகமும் அதன் அருகில் இருந்த அமெரிக்க கலாசார மண்டபமும் பலத்த சேதத்திற்குள்ளானது.

இதன் பின்னணி குறித்து ஆராயவும் அத் தாக்குதல் தொடர்பாக அமெரிக்க தூதரகங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களை ஆராயவும் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகளின் விஜயம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, இந்திய நாடாளுமன்றத் தாக்குதல் தொடர்பில் பாகிஸ்தான் மீதான அமெரிக்காவின் கடுமையான அழுத்தமே இத் தாக்குதல்களுக்கு வழி கோலியிருக்கலாமெனவும் நம்பப்படுகிறது. (உ-5)

## விளையாட்டு செய்திகள்

## முத்தரப்பு போட்டியில் அவுஸ்ரேலியா வெற்றி

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் முத்தரப்பு போட்டியில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா அணியை வென்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 39 ஓவர்களில் சகலவிக்கெட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களைப்பெற்றது. இதனை அடுத்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 19 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றிஇலக்கை அடைந்தது.

இத் தோல்வியின் ஊடாக அடுத்த மாதம் இடம்பெறவுள்ள இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதில் தென்னாபிரிக்கஅணிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

(செ-10)

### அரவிந்த உட்பட மூவர் இலங்கை

## கிரிக்கெட் அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னைநாள் உபதலைவர் உட்பட மூவர் மீண்டும் இலங்கை கிரிக்கெட் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் ஏப்ரல், மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் சார்ஜாவில் இடம்பெறவுள்ள ஒரு நாள் போட்டிகள் மற்றும் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அரவிந்தடி சில்வா, ரொமேஷ் களுவித்தாரண, பிரமோதய விக்கிரமசிங்க ஆகியோர் மீண்டும் இலங்கை அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். (செ-10)

### அமெரிக்கத் தூதரகத் தாக்குதல்;

## பாகிஸ்தானியர்களுக்கு தொடர்பில்லையாம்

(புதுடில்லி)

இந்தியாவின் கொல்கத்தா நகரில்அமைந்துள்ளஅமெரிக்க தூதரகத்தை தாக்கியவர்கள் பாகிஸ்தானியர்களல்லர் எனத் தெரிவதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று ஆயுதம் தாங்கியஇருநபர்கள்தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்திய போது அங்கு பொருத்தப்பட்டிருந்த வீடியோ கமராவில் இருவரது உருவங்களும் பதிவாகியிருந்தன.

இந்தப்படங்களை ஆய்வு செய்த பொலிஸ் அதிகாரிகள் தாக்குதல் நடத்தியவர்கள் பாகிஸ்தானியர்களோ காஷ்மீர் தீவிரவாதிகளோ அல்லர் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் நடத்தப்படும் தாக்குதல்களுக்குபாகிஸ்தான் தீவிரவாதிகளே, காரணமென இந்தியா கூறிவரும் இந்த வேளையில் மேற்படி தூதரகத்தில்பொருத்தப்பட்டிருந்த வீடியோ கமராமூலம்எடுக்கப்பட்ட படங்கள் இந்திய அரசுக்கு தலையிடியைக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## தடகள விளையாட்டு விழா

(ஏழாலை)

கந்தரோடை ஸ்கந்தா விளையாட்டுக்கழகமும் யாழ். சர்வோதயமும் இணைந்து நடத்தும் வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட பாலர் பாடசாலைகளுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று தொடக்கம்மூன்று தினங்கள்நடைபெறவுள்ளன.

நவாலி சென்பீற்றர்ஸ் றோ. க. த. க. பாடசாலை அதிபர் சிறில் சுகந்திரன் தலைமையில் நடைபெறும். இறுதி நாள் நிகழ்வில் விசேட அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனும் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலரும் யாழ். மேலதிக அரச அதிபருமான திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-12)

## குழு நிலைத் தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படுகின்ற நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியின் குழுநிலைத் தெரிவுப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்,

நாளைபி.ப 4.30மணிக்கு சென். நீக்கிலஸ் எதிர் யாழ். பல்கலைக்கழகம்.

திங்கள் கிழமை பி.ப 4.30 மணிக்கு சென் அன்ரனீஸ் எதிர் பொற்பதி விளையாட்டுக் கழகங்களிடையே இடம் பெறவுள்ளன.

(உ-10)

### குண்டு வெடிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பிரிட்டிஷ் தூதுவராலயத்திற்கு முன்னால்பாரியகுண்டு ஒன்று வெடித்துள்ளது.

வாகனங்கள் நிறுத்தப்பட்ட இடத்தில் இக்குண்டு வெடித்ததால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாத போதும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

(து)

## யூரோவில் இணைவது குறித்து பிரிட்டனில் எதிர்ப்பு அலை

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கென உருவாக்கப்பட்ட பொது நாணயமான யூரோவில் இணைவது குறித்து பிரிட்டிஷ் மக்களின் எதிர்ப்பு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த 6 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய கணக்கெடுப்பில் 73வீதமான மக்கள் யூரோ நாணயத்திற்கு எதிராகவும் 23 வீதமான மக்கள் ஆதரவாகவும் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்

இதே வேளை யூரோ நாணயத்தை ஏற்பது பணவீதத்தை அதிகரித்து பொருளாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்துமென்று இங்கிலாந்து வங்கியின் இயக்குநர் தெரிவித்துள்ளார் அத்துடன்1இலட்சத்து50ஆயிரத்திற்கும் அதிக மானோர் வேலைவாய்ப்புக்களை இழக்க நேரிடுமெனதனியார் ஆய்வுகள் சுட்டிக்காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகி

(4-ம் பக்கம்பார்க்க)

செயற்பால செய்யா
திவறியான் செல்வம்
உயற்பால தின்றிக் கெடும்
- குறள்

# வலம்புரி

## மௌனம் எதற்கு?

விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்து செல்கிறது. தடுப்பாரும்இல்லை தட்டிக் கேட்பாரும் இல்லை என்ற நிலையில் யாழ். வர்த்தகர்கள்சிலர் தம்பாட்டில் நீதிநெறி தவறி நடந்து கொள்கிறார்கள். இதனால் ஏழை மக்கள் படும்பாடு போதுமென்றாயிற்று. இதில், ஏழைகளுக்காகக் குரல் கொடுப்பதற்கு எவ்ருமே இல்லைஎன்பதேஉண்மை நிலை.

இதில்ஆச்சரியப்படுவதற்குஎதுவுமில்லைஆனால் அதிசயம் என்னவெனில் யாழ். வர்த்தகர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வணிகர் கழகமும் விலையை நியாயமற்ற முறையில் உயர்த்த வேண்டாமெனக் கோரி அறிக்கை விடுவதாகும். வர்த்தகர்களின் நலன்களுக்காகக் குரல் கொடுக்கும் வணிகர் கழகம் விலையேற்றத்தின் போது மட்டும் வெறும் அறிக்கையை மட்டும் வெளியிட்டு தன்மீது குற்றம் இல்லையெனத் தப்பித்துக் கொள்கிறது.

விலையை உயர்த்திவிற்கும் வர்த்தகர்கள் மீது வணிகர் கழகம் தனது கழக யாப்புகளுக்கமைவாக நடவடிக்கை எடுப்பதை விடுத்து அறிக்கையை மட்டும் விடுவது ஓர்பொறுப்பான அமைப்பின் செயலாக இருக்க முடியாது.

முதலாளிகள் முதலாளிகள் பக்கம் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஆனால் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் இது விடயத்தில் மௌனமாக இருப்பது புரியாத புதிராகவேயுள்ளது.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெறுவதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு கணிசமான இடத்தைப் பெற்றிருந்தது. அதனிலும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் தேர்தல் பிரசாரத்திற்கு படித்தவர்களோ, பணக்காரர்களோ மதிப்பளித்ததை விட ஏழை மக்களே அவர்களின்கருத்தை ஏற்று - அதன்படி செய்தும் காட்டினார்கள்.

ஆனால் இப்போதுஅத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து செல்கிறது. இதனால் ஏழைகள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். எனினும்அவர்களுக்காக யாழ. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இதுவரை குரல் கொடுக்காதது துரதிர்ஷ்டமே. எதுவாயினும், ஏழைகள் என்றால் நிலைமை இதுதான் என்பதே வெளிப்படை.

---

திறனாய்வுக்களம்

# திருமறைக் கலாமன்றக் கலைநிலா அரங்கில் சிறப்புற்ற "நியாயத்தான்" சிந்துநடைக் கூத்து

**கமில்டன்**
குருநகர்

வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்கு களமமைத்துக் கொடுக்க வேண்டியது ஒரு சமுதாயத்தின் இன்றியமையாத பணியாகும்.இப்பணிமூலம் அவர்களது படைப்பாக்கத்திறன்கள் விரிவடைந்து காத்திரமான சமுதாயம்சார் சிந்தனைகள் செயலூக்கம் பெற்று அனைவரும் நன்மையடைவர் என்பது மறுப்பதற்கில்லை. இந்நோக்கில் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் திருமறைக்கலாமன்றமனது இளங்கலைஞர்களை வளர்க்கின்ற புதிய கலைக்களமொன்றினை ''கலைநிலா அரங்கு'' எனும் பெயரில் மாதந்தோறும் நடத்தி வருகின்றது.இந்த அரங்கில் இலக்கிய உரைகள், கவியரங்குகள், பட்டிமன்றங்கள், கிராமியக் கலைகள், இசைக்கச்சேரிகள், நடனநிகழ்வுகள், பல்வேறுபட்ட பாரம்பரிய, நவீன, பரீட்சார்த்த நாடக வகைகள் போன்றன பல்வேறு வகைகளிலும் இனங்காணப்பட்டு மன்ற அரங்கில் மேடையேற்றப்பட்டு வருகின்றன. இம்முயற்சியானது ஒருவகையில் காலத்தின் கடமையாகவும் அமைகின்றது.

சென்ற ஆண்டில் நடத்தப்பட்ட கலைநிலா அரங்கில் கவியரங்கு, விசேட குழுப்பாடல்,வயலின் சோலோ மற்றும் சிறப்பு நிகழ்வான 'நியாயத்தான்' சிந்துநடைக் கூத்து என்பனவும் மேடையேற்றப்பட்டன. நியாயத்தான் சிந்துநடைக் கூத்தானது ஒருபுதிய மாறுபட்ட முயற்சியாகும்.

### சிந்து நடையில் 'நியாயத்தான்'

சிந்துநடைமரபானது ஆரம்பத்தில் 'உடுக்கடிகதை' யில் இருந்தே தோற்றம் பெற்றதெனக் கூறுவர். ஆரம்ப காலங்களில் தெய்வ வழிபாட்டுத் தலங்களில் மக்களுக்கு அறநெறியூட்ட உடுக்கினை வாசித்து அதன் தாளக்கிரமத்தில் கதைகளைக் கூறினர். பின்னர் படிப்படியாக லயப்பாங்கு, பாடல்முறை என்பன அவ்வுடுக்கின் தாளத்துடன் இசைந்து மாற்றம் பெற்றது. அதுவே சிந்துநடை மரபாக பேணப்படுகின்றது. குறிப்பாக சைவர்கள் இதனைக் காத்தவராயன் கதையைக் கூறுவதற்கே அதிகம் பயன்படுத்தினர். காலப்போக்கில் உலக மாற்றத்தோடு பல மாறுபட்ட புதுமையுணர்வுகள் பாரம்பரிய அரங்க வடிவங்களிலும் தாக்கம் செலுத்தின. சில முற்போக்கானகலைஞர்கள் சமூக மாற்றம், மற்றும் அரசியல் பிரசார நோக்கம் கருதியும் சில நாடகவடிவங்கள் மாற்றம் பெற்றன. அந்தவகையில் 'நியாயத்தான்' கூத்தினை எழுதிய இளவாலை புலவர் செல்லத்துரை இதுவரை நான்கு மாறுபட்ட நோக்கங்களிலமைந்த சிந்துநடைக் கூத்துக்களை எழுதி மேடையேற்றி அவற்றை நூலுருவிலும் ஆக்கியுள்ளார். நியாயத்தான் கூத்தானது கிறிஸ்தவ கருப்பொருளை மையப்படுத்தி உருவாக்கப்பட்டதாகும். இதனை இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மாணவர்கள்தயாரித்து வழங்கினர்.

### பைபிள் கதை

புனித கென்றியரசர் கல்லூரியானது இளவாலையிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் நெடுங்காலமாக கல்வி புகட்டுதலுக்கப்பால் மாணவரிடையே கலைப் பாரம்பரியத்தினை வளர்ப்பதுடன் அதனைப் பேணுவதிலும் ஊக்கத்துடன் செயற்பட்டு வருகின்றது. சென்ற வருடம் நடைபெற்ற தமிழ் மொழித்திறன் போட்டியில் புலவர் செல்லத்துரை எழுதிய நியாயத்தான் சிந்துநடைக் கூத்தினைதயாரித்து மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் முதலாமிடத்தினைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இக் கூத்தினை புனித கென்றியரசர் கல்லூரி ஆசிரியரும், திருமறைக்கலாமன்ற இளவாலைக் கிளை இணைப்பாளருமாகிய விஜயகுமார் பழக்கி நெறிப்படுத்தினார். கிறிஸ்தவ பைபிள்கதைகளில் ஒன்றான 'மன்னிக்கும் ஊழியன்' கதை கூத்தாக மாற்றப்பட்டிருக்கின்றது.அரசனொருவனிடம்கடன் பெற்றுஅதனை மீள செலுத்த வகையற்ற நிலையில் அரசனால் மன்னிப்பு வழங்கப்படுகிறது. ஆனால் அந்த முதலாளி தன்னிடம் பெற்ற சிறு கடனை மீளச் செலுத்த முடியாதகூலியாளை வதைத்து துன்பப்படுத்துகின்றான், இதனைக் கேள்வியுற்ற அரசன் தனவந்தனை அழைத்து தண்டனை வழங்குவதுகதையாகும்.

### பார்ப்போரைக் கவர்ந்தது

பன்னிரு மாணவக்கலைஞர்கள் சிறப்பாக கூத்தினை நகர்த்திச்சென்றனர்.பாடல், இசை என்பன சிறப்பாக அமைந்திருந்தன. கூத்தின் ஆரம்பகட்டத்தில்ஒலியமைப்பு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பது தென்பட்டது. எனினும் சிறந்த பாத்திரத் தெரிவும், ஒப்பனையும், ஆடையமைப்பும் ஆற்றுகைக்கு உரமிட்டிருந்தன. காப்பு, மங்களம் பாடுதல் என்பன அக்கூத்தின் மரபைக் கோடிட்டுக் காட்டியது. வித்தியாசமான காட்சி மாற்றம் புதுமையான உத்தியாக இருந்தது. ஒட்டுமொத்தத்தில் தேர்ச்சியடைந்த பெரிய கலைஞர்களைப்போல் நடிகர்கள் பார்ப்போர் அனைவரையும் கவர்ந்து வைத்திருந்தமை மறுப்பதற்கில்லை.

இவ் இளங்கலைஞர்கள் போல இன்னும் பலர் இனங்காணப்பட வேண்டியவர்கள். அவர்கள் மூலம் யாவரும் பெருமையடைய முடியுமென்பது நம்பிக்கையாகும். தேடலும்துடிப்புமுள்ள பலவிடலைகளை உருவாக்குவதும், வளர்ப்பதும் சமூகத்தின் அனைத்துசாராரினதும் காலக்கடமையாகும்.

---

படையினர் பாவனையில் உள்ள

# பாடசாலைகளின் விபரங்களை உடன் அனுப்புமாறு அரச அதிபருக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் படையினர் பாவனையில் உள்ள பாடசாலைகளின் விபரங்கள் மற்றும் அதனால் கல்விச் சமூகம் எதிர்நோக்கும் பாதக விளைவுகள் குறித்த அறிக்கையை உடனடியாகஅனுப்பி வைக்குமாறு புனர் வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சின் செயலாளர் ஏ.ஜெயரட்ணம், யாழ்.அரச அதிபரை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கே.கஜேந்திரகுமார் மற்றும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் ஆகியோர் அண்மையில் புனர்வாழ்வுமீள் குடியேற்றஅமைச்சர்டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து,

யாழ்.மாவட்டத்தில் உள்ள 180 பாடசாலைகளில் படையினர் தங்கியுள்ளமையால் கல்விச் செயற்பாடுகளில் ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள குறித்து விளக்கியதுடன், பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்புகொண்டு இது விடயத்தில் சாதகமான நடவடிக்கையைவிரைந்துஎடுக்கவேண்டும் எனக்கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கைக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையிலேயே அரச அதிபருக்கு மேற்படி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ)

---

## தினசரி தியானம்

### குரு

தந்தை தாயாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பம் நமக்காவானும் - எந்தமுயிர்
தானாகுவானும் சரணாகுவானும் அருட்
கோனாகுவானும் குரு

- குருவணக்கம்

அண்ணலே, நீ அருட்குருவாக வந்து என் உள்ளமாகிய கல்லைப் பிசைந்து தெய்வக் கனியாக மாற்றி அமைக்க வல்லவன். என் உடல், பொருள், ஆவியெல்லாம் உனக்கே உரியனவாகுக.

எருவைச் செடியானது தன் மயமாக்குவதுபோன்று குரு சிஷ்யனைத் தன் மயமாக்குகிறார். அவர் கருணையே வடிவெடுத்தவர். கைமாறு கருதாத பேரியல்பை அவரிடம் காணலாம். மனிதனைத் தெய்வமாக மாற்றியமைப்பவரைத் தெய்வமாகக் கருதாது வேறு எங்ஙனம் கருதுவது?

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

---

# இன்று யாழ்ப்பாணத்தில் சிறுவர் பாராளுமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முதலாவது சிறுவர்பாராளுமன்ற நிகழ்வுகள் இன்று காலை9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் செல்வன் இருதயராஜ்,செல்வி சோபனா ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் செல்வி எமர் கிறாங்கிள், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்டசிறுவர் உரிமை மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் து. வைத்திலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

---

பல்கலைக் கழக அனுமதிக்கான

# வெட்டுப்புள்ளிகள் மார்ச் 31 இற்கு முன்னர்

(கொழும்பு)

கடந்தவருடம் நடைபெற்ற க.பொ.த.உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் மார்ச்31ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படுமென பல்கலை மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் மெண்டிஷ் தெரிவித்துள்ளார்.

தற்போது புள்ளிகளைக் கணிப்பிடும் வேலைகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார். (உ-5)

## முதலாம் மாத நினைவலைகள்

| மண்ணில் மழலையாக | | விண்ணில் மாமனிதராக |
|---|---|---|
| 1933 - 07 - 23 |  | 2001 - 12 - 28 |

### மாமனிதர் கலைஞானி
### அ. செல்வரத்தினம்

தமிழர் வரலாறுதனை நீர் காத்தீர்
தாயகம் வியக்க நற்பணி புரிந்தீர்
தேசத்திற்காக உமையே அர்ப்பணித்தீர்
தமிழ் மண்ணில் இன்று மாமனிதரானீர்.

அமரர் மாமனிதர் கலைஞானி அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை ஆறுதல் தெரிவித்தவர்கள், மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், பத்திரிகைகள் வாயிலாக அஞ்சலி மற்றும் இரங்கற்செய்தி வெளியிட்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு:** அன்னாரது அந்தியேட்டி கிரியைகள் இன்று (26.01.2002) காலை 7.00 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் நடைபெறும். தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருக்கும் நினைவுப்பிரார்த்தனையிலும், மகேஸ்வர பூஜையிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

குடும்பத்தினரும்,
மாமனிதர் கலைஞானி
அருங்காட்சியக இயக்குநரும்.

(C-3336)

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தை மாதம் 15ம் நாள் (28.01.2002) திங்கட்கிழமை பகல் 10.00 மணி முதல் 11.00 மணி வரை வரும் கும்பலக்கின சுப முகூர்த்த வேளையில்

**எமது ஏக புத்திரி**
**திருநிறைச்செல்வி**
**சிந்துஜா (சிந்து)**
அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா செய்வதற்கு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து எம்மை மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

லட்சுமி வெதுப்பகம்,
மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
**திரு. திருமதி காந்திராஜ்** தம்பதிகள்

(C/3339)


## துயர் பகிர்கிறோம்

**திருமதி சபாநாயகம் கோடீஸ்வரி**

எமது சக ஆசிரிய மாணவனாகிய
**சபாநாயகம் பாலமுரளி** அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி சபாநாயகம் கோடீஸ்வரி** அவர்களின்
திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*1ம் அணி ஆசிரிய மாணவர்கள்,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

## கிறீன் பாக் அன்ட் மிக்ஸ்சிங் ஸ்ரூடியோ



**எமது சேவைகள்** மிகக்குறைந்த கட்டணம்

**இயற்கைச் சூழலில் மங்களகரமான நிகழ்ச்சிகளை மிக்ஸ்சிங் செய்வதற்கான வசதிகள்**

குறோட்டன், பாம்ஸ், றெசினா, சைப்பிரஸ், பூச்சாடிகள் போன்றவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

152/2, கோவில் வீதி,
(*ICRC*க்கும் கைலாய பிள்ளையார் கோவில் சந்திக்கும் இடையில்)
யாழ்ப்பாணம்.

[C/3338]




**உங்கள் பிள்ளை கூட்டல், கழித்தல், அட்சரங்கள் ஆகியவற்றைச் சுலபமாய் அறியவும், வண்ணங்களை உபயோகிக்கவும் கற்றுக்கொள்ளும் பருவத்திலேயே இவற்றுக்கு அப்பாலும் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. அதுதான் சேமிக்கும் பழக்கம். இது உங்கள் பிள்ளையுடன் கூடவே வளர்ந்து, வங்கி நடைமுறைகளைக் கற்றுக்கொள்ள வழிகாட்டும். நாமோ இதற்கு உதவ மகிழ்ச்சியுடன் காத்திருக்கின்றோம்.**

**உங்கள் பிள்ளை பள்ளி செல்லத் தொடங்கிய ஒரு மாதத்துள்**




நடைமுறைகளைக் கற்றுக்கொள்ள வழிகாட்டும். நாமோ இதற்கு உதவ மகிழ்ச்சியுடன் காத்திருக்கின்றோம்.

உங்கள் பிள்ளை பள்ளி செல்லத் தொடங்கிய ஒரு மாதத்துள் சிங்கிதி சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள். எங்கள் பங்காக உங்கள் ஆரம்ப வைப்புத் தொகையின் 50% த்தை நாம் அக்கணக்கில் வரவில் வைப்போம். இதன் உச்ச எல்லை ரூ. 1000/- ஆகும். உதாரணமாக உங்கள் ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 2000/- ஆயின் நாம் ரூ. 3000/- ஆகும் வகையில் மேலும் ரூ. 1000/- த்தை அக்கணக்கில் வரவு வைப்போம்.

மேலதிக விபரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கியுடன் தொடர்பு கொள்ளவும்.

# ஹற்றன் நஷனல் வங்கி

## உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

**கணக்கு மீதியை ரூ 2500/- ஆக உயர்த்தி சிங்கிதி பத்தும் சீட்டிழுப்புக்களுக்கும் தகுதி பெறுங்கள்**

[C/3340]

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.